2007 தை 01.15

பக்கங்கள் 12

விலை 12/=

Registered as a News Paper in Srilanka.

மாதமிரு மலர்


# தமிழ் அலை

*The Tamil Alai.*

இப்பொழுது மாதமிருமுறை
வெளிவருகின்றது தமிழ் அலை

அலை 19 இதழ் 01

SRILANKA NATIONAL TAMIL NEWS PAPER




## மலர்ந்துள்ள புதிய ஆண்டு எம் மக்களிற்கு அடக்குமுறையற்ற நிம்மதியான வாழ்வை பரிசளிக்கட்டும்

## நாம் தொடர்ந்தும் ஆயுதங்களில் மோகம் கொண்டு அதனை சுமந்திருக்க விரும்பவில்லை.





## உரிமைகளுடன் வாழ அரசியல் தலைமைத்துவம் அவசியம்.




## சதாம் ஹுசைன்: சரிக்கப்பட்ட மத்திய கிழக்கின் சிங்கம்.

## தொப்பிக்கலை பஞ்சுமரத்தடி பிரபா குழுவின் பிரதான இராணுவத் தளம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளினால் முற்றாகத் தாக்கியழிப்பு

### 35 பிரபா குழுவினர் பலி பெருந்தொகையான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன



30.12.2006 அதிகாலை 01.30 மணியளவில் மட்டக்களப்பு நகரத்திலிருந்து 40 கிலோமீற்றர் தொலைவிலுள்ள தொப்பிக்கலை பஞ்சுமரத்தடி பிரபா குழுவின் இராணுவத் தளம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஆழ ஊடுருவித் தாக்கும், கொமாண்டோப் படையணிகளினால் முற்றாக நிர்மூலம் செய்யப்பட்டுள்ளது. இத் தாக்குதலில் 35 பிரபா குழு உறுப்பினர்கள் கொல்லப்பட்டதுடன் அவர்களிடமிருந்து பெருந்தொகையான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இத் தாக்குதலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் இரண்டு போராளிகள் சிறு காயங்களுக்குள்ளாகியதுடன், படைப்பிரிவுகள் வெற்றிகரமாக தமது தளங்களுக்குத் திரும்பியுள்ளனர். இத் தாக்குதல் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதி பிள்ளையான், தளபதி ஜெயம் ஆகியோரின் நேரடி வழிகாட்டலிலும் நெறிப்படுத்தலிலும் நடாத்தப்பட்டது. இத் தாக்குதலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் 200 போராளிகள் பங்கேற்றனர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களான

டி56 ரக துப்பாக்கிகள் 17
ஆர்.பி.ஜி. 03
கிரனைட் லோஞ்சர் 02 உள்ளடங்கலாக பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## மலர்ந்துள்ள புதிய ஆண்டு எம் மக்களிற்கு அடக்குமுறையற்ற நிம்மதியான வாழ்வை பரிசளிக்கட்டும்

### தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் புத்தாண்டு வாழ்த்து



மலர்ந்துள்ள இப் புதிய ஆண்டு எம் மக்களிற்கு அடக்குமுறையற்ற நிம்மதியான வாழ்வையும், சமூகப் பொருளாதார அபிவிருத்தியையும் வழங்குவதோடு சகோதர இன மக்களுடன் இணைந்து புதியதொரு உலகைப் படைக்க வாய்ப்புகளை நல்கட்டுமென தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம் மண்ணை ஆக்கிரமித்து, எம் இளைஞர்களதும், சிறார்களதும் எதிர்காலத்தைப் பாழ்படுத்தி சகோதர இன மக்களையும் அடக்குமுறையில் வைத்திருக்க முனையும் பிரபா குழுவினரை எம் மண்ணிலிருந்து துடைத்தெறிந்து அச்சமற்ற நிம்மதியான வாழ்வொன்றை எம் மண்ணில் எம் மக்களுக்கும், சகோதர மக்களுக்கும் பெற்றுக்கொடுக்கவே நாம் அர்ப்பணிப்புடன் போராடி வருகின்றோம். மலர்ந்துள்ள இவ்வாண்டு எம் இலட்சியங்களை ஈடேற்றி நிம்மதியான வாழ்வொன்றை எமக்குப் பரிசளிக்கட்டும்.

## புத்தாண்டில் பயங்கரவாதம் பூண்டோடு அழிக்கப்படும் என்கின்றார் ஜனாதிபதி



பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழிப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பயங்கரவாதத்தினைப் பூண்டோடு அழிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதுடன், நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை எந்தவித தங்கு தடைகளுமின்றி முன்னெடுக்கப் போவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். வடக்குக் கிழக்குப் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்காக நேர்மையாகச் செயற்பட்டேன். இது குறித்து இணக்கப்பாட்டை எட்டுவதற்காக அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுக்களை நடாத்தினேன். நான் பதவியேற்ற ஒரு கிழமைக்குள் கண்மூடித் தனமான தாக்குதல்களை மேற்கொண்டனர், அப்பாவிப் பொதுமக்களைக் கொலை செய்தனர். கொலைகளை நிறுத்துமாறு புலிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தேன். ஆனால் அவர்கள் படுகொலைகளை நிறுத்தவில்லை. இதன் காரணமாகப் புலிகளின் தாக்குதல்களுக்கு எதிராகத் தாக்குதல்களை ஆரம்பித்தோம்.

தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அதேசமயம் அவர்களுக்கு ஜனநாயகத்தை வழங்கி, பயங்கரவாதத்திலிருந்து அவர்களை மீட்க வேண்டும். அத்துடன், சிங்கள, முஸ்லிம் மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். இவை எல்லாவற்றிற்குமாக பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

## திருமலை, மட்டக்களப்பில் 30 பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவில்லை

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த 30 பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கப் பாடசாலைகளின் 2007ம் ஆண்டிற்கான முதலாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காக நாடளாவிய ரீதியில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், திருமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த 30 பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளைத் தொடங்க முடியாத சூழ்நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இடம்பெயர்ந்த மக்கள் இந்தப் பாடசாலைகளில் தங்கியுள்ளனர். இடம்பெயர்ந்த அகதி மக்களுக்கு வேறு தங்குமிடங்கள் ஏற்படுத்திக் கொடுக்கும் வரை பாடசாலைகள் இயங்காதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் 04 பாடசாலைகளிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 26 பாடசாலைகளிலும் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பட்டிருப்பில் பிரபா குழுவின் முன்னணிக் காவலரன் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளினால் தாக்கியழிப்பு.

### நான்கு பிரபா குழு உறுப்பினர்கள் பலி, ஆயுதங்களும், உந்துருளிகளும் கைப்பற்றப்பட்டன.



மட்டக்களப்பு கட்டுப்பாடற்ற பகுதியான பட்டிருப்பில் பிரபா குழுவின் முன்னணிக் காவலரன் ஒன்றின் மீது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவினரால் இன்று நண்பகல் 01.20 மணியளவில் அதிரடித் தாக்குதல் ஒன்று நடாத்தப்பட்டது. இத் தாக்குதலில் 04 பிரபா குழு உறுப்பினர்கள் கொல்லப்பட்டதுடன், அவர்களிடமிருந்து இரண்டு வு 56 ரக துப்பாக்கிகளும், 02 உந்துருளிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இத் தாக்குதலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தரப்பில் மட்டக்களப்பு புதூரைச் சேர்ந்த கப்டன் சிரஞ்சீவி, மட்டக்களப்பு கிரானைச் சேர்ந்த கப்டன் கமலன் ஆகியோர் வீரமரணம் அடைந்துள்ளனர்.

## பிரபா குழுவினரால் கடத்தப்பட்ட மூன்று இளைஞர்கள் சுட்டுப் படுகொலை



வாழைச்சேனையில் பிரபா குழுவினரால் கடத்தப்பட்ட 03 இளைஞர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் 31.12.2006 அன்று வாழைச்சேனை, கிரான் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதன்போது கொல்லப்பட்டவர்கள், கிரானைச் சேர்ந்த கல்லூரி மாணவனான நமசிவாயம் புவனேஸ்வரன் (வயது 22), கிழக்குப் பல்கலைகழகத்தில் பணிபுரியும் கிரானைச் சேர்ந்த வீரசிங்கம் செந்தூரன் (வயது 25) மற்றையவர் யோகநாயகம் மயூரன் (வயது 22) என்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

31.12.2006 அன்று இரவு 9.30 மணியளவில் வீட்டில் பேசிக் கொண்டிருந்த இளைஞர்களை, வீட்டிற்கு வெளியே அழைத்துச் சென்ற பிரபா குழுவினர், அவர்களது கைகளைப் பின்புறமாகக் கட்டிய பின்னர் சுட்டுக் கொன்று விட்டு, சடலங்களைக் கிரான், கிருஷ்ணன் கோவிலடியில் வீசியுள்ளனர். இவர்களது சடலங்கள் வாழைச்சேனை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு, விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## மன்னாரில் கிபீர் வான் தாக்குதல்: 8 சிறுவர்கள் உட்பட 15 பொதுமக்கள் பலி 40 பேர் படுகாயம்



மன்னார் மாவட்டத்தில் கட்டுப்பாடற்ற பகுதியான இலுப்பைக்கடவையில் 02.01.2007அன்று காலை கிபீர் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் 8 சிறுவர்கள் உட்பட 15 பொதுமக்கள் படுகொலை செய்யயப்பட்டுள்ளனர். 40~க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். மன்னார் நகருக்கு 24 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இலுப்பைக்கடவை படகுத்துறை கிராமத்தில் 02.01.2007 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் கிபீர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை நடாத்தியுள்ளன.



இதில் 8 சிறுவர்கள் உட்பட 15 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 40~க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்த சிறுவர்களில் நால்வர் முழங்காவில் மருத்துவமனையில் உயிரிழந்தனர். பள்ளமடு மருத்துவமனையில் மேலும் பலர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படுகாயமடைந்த பொதுமக்கள் முழங்காவில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு அவர்கள் கொண்டு செல்லப்பட்டனர்.



கிபீர் விமானங்கள் வீசிய குண்டுகளால் படகுத்துறையில் இருந்த 35 வீடுகளில் 34 வீடுகள் முற்று முழுதாக அழிக்கப்பட்டுள்ளன. மேலும் கர்ப்பிணி மனைவி அவரது கணவருடன் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஒரு சர்வாதிகாரி கொல்லப்பட்டால், அவர் அட்டகாசமும், அதிகாரமும் அன்றோடு முடிவுக்கு வந்துவிடும் ஆனால் ஒரு புரட்சிகரப் போராளி கொல்லப்பட்டால் அன்று தொடங்கி அந்தத் தியாகத் தீ பற்றிப் படர்ந்து, வளர்ந்து கொண்டேயிருக்கும். அது அணைவதில்லை


தை 01~15, 2006

இல,39. கோவிந்தன் வீதி, மட்டக்களப்பு

மின்னஞ்சல்: tamilalainews@yahoo.com

இணையத்தளம்: WWW.tamilalai.org

தொலைபேசி: 0652222102


*அன்புடன் வாசகர்களுக்கு,*
*மீண்டும் மறு தமிழ் அலையின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி*

**பயங்கரவாதிகளிடமிருந்து மக்களை மீட்க மக்களின் ஒத்துழைப்பும் அவசியம்.**

இன்றைய காலகட்டத்தில் இலங்கை தீவில் தமிழ் மக்கள் பாவப்பட்ட ஜென்மங்களாக வாழ்கின்ற துர்பாக்கிய நிலைமை தொடர்கின்றது. இத்தீவு சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழ் மக்கள் இந்நாட்டின் சம அந்நஸ்துக்குரிய பிரஜைகளாக கருத, நடாத்த பேரினவாத மேலாதிக்க சிந்தனை கொண்ட ஆரம்பகால சிங்கள அரசுகள் முன்வரவில்லை. ஒரு நாட்டுக்குள்ளேயே இரண்டாம் தரப்பிரஜையாக நடாத்தப்பட்ட அவலம் தொடர சம அந்தஸ்துக்கான உரிமைகளை கோரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இனம், மொழி, பாதுகாப்பு, கல்வி, வேலைவாய்ப்புக்காக போராடி அவற்றுக்கான வன்முறைகளினால் தீர்வு காண சிங்கள அரசுகள் முனைய உரிமைப் போராட்டம் விடுதலைப் போராட்டமாக பரிணாமித்தது. அடக்கப்படுகின்ற ஒவ்வொரு இனமும் அடங்குவதற்குப் பதிலாக வீறுகொண்டெழுவதுதான் உலக வரலாறு. அதனால் தான் இன்று உலக வரைபடத்தில் இத்தனை நாடுகள். இதனை ஏனோ சிங்கள அரசுகள் உணரவில்லை.

சர்வதேச அனுதாபம், ஒட்டுமொத்த ஆதரவு, பலமான பின்புலம் என்பவற்றுடன் ஆரம்பமான ஈழ விடுதலைப் பேராட்டம் இன்று உலகின் மாபெரும் பயங்கரவாதப் போராட்டமாகத் தன்னை விகாரித்துக் கொண்டுள்ளது. ஒரு தனிமனிதனின் அதிகாரப்பசிக்காக இந்நாடும், இந்நாட்டு மக்களும் செலுத்தியுள்ள விலை அளப்பரியது. அன்று சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களுக்காக இழைத்த கொடுமைகளை விடவும் புலிப் பாசிசம் இன்று செய்கின்ற கொடுமைகள் கொடுமையானது. பிரபாகரன் எனும் தனிமனிதன் ஆட்டுகின்ற பயங்கரவாதம், தமிழ் மக்களின் உயிர்கள், உடமைகள், கல்வி, செல்வம், நிம்மதியான வாழ்வு போன்ற அனைத்தையுமே சூறையாடிக் கொண்டிருக்கின்றது. இவ்வாறாக தமிழ் மக்களின் இன்றைய அவசிய, அவசரத் தேவையாயிருப்பது இப் பாசிச பயங்கரவாதத்திடமிருந்து விடிவைப் பெறுவதே.

2002 ஆம் ஆண்டு கையெழுத்தான புரிந்துணர்வு உடன்படிக்கை எனும் கவசமும், இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு என்னும் பாதுகாவலர்களும் பிரபாகரனினதும், பொட்டனினதும் பயங்கரவாதத்திற்கு துணை போக இலங்கைத்தீவில் மனித உயிர்கள் மலிவாகப் போயின. மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் தொடக்கம் சகோதர இனமக்கள் வரை கொலையும், தாக்குதல்களும் தொடர காகிதத்தில் கண்டனங்கள் வந்ததே தவிர பயங்கர வாதத்தைக் கடக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் புரிந்துணர்வு உடன்படிக்கை 3ஆவது ஆட்சியாளர்களையும், காண பயங்கரவாதம் எல்லை கடந்து தலைநகருக்குள் தாண்டவம் ஆட அரசு விழித்துக் கொள்ள பதில் நடவடிக்கைகளும் ஆரம்பமாயின. தாக்குதல்கள், பதில் தாக்குல்களின் பரிணாமம், இப்போது வட~கிழக்கில் போர் மோகத்திற்கான சமிஞ்ஞைகளாக வெளிப்படத் தொடங்கியுள்ளது. இவ்வாறான நிலையில் தனது மாவீரர் தின உரையில் புரிந்துணர்வு ஒப்பந்தமானது சுக்கு நூறாகி அதன் ஈமைக்கிரியைகளும் முடிந்து விட்டதாகவும் மீண்டும் போர்தான் ஒரே வழி என முழங்கிய பிரபாகரன் தன் பங்கருக்குள் தலைமறைவாகினார்.

தமிழ் மக்களைப் பற்றி கிஞ்சித்தும் கவலை கொள்ளாத பிரபாகரனால் நெறி கெட்ட பயங்கரவாதத்திலும் யாழ். குடாநாட்டில் ஆறு லட்சம் மக்களும், வாகரையில் 60,000மக்களும் உண்ண உணவின்றி பட்டினிச்சாவை எதிர்நோக்கும் அவலம் தோன்றியுள்ளது. தம் சொந்த மக்களையே மனிதக் கேடயங்களாகவும், பாதுகாப்பரணாயும் பயன்படுத்தி வரும் பயங்கரவாதியிடமிருந்து தமிழ் மக்களை பாதுகாக்க வேண்டும். பயங்கரவாதிகளிடமிருந்து தமிழ் மக்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு சகல மக்களும் ஒத்துழைப்பு நல்குவது அவசியம்.

இப்போது கிழக்கிலே தொடர்கின்ற மோதல்கள் பிரபா குழுவின் முதுகெலும்பை உடைத்து வருகின்றது. பயங்கரவாதிகளின் பிடி கிழக்கில் முற்றாகவே தளர்வடையும் நிலை உறுதியாகத் தெரிகின்றது. இச்சந்தர்ப்பத்தில் தான் மக்கள் சமயோசிதமாக செயற்பட வேண்டிய கடப்பாடும் உண்டு. தோற்றுக் கொண்டிருக்கும் பயங்கரவாதிகள் தமது இறுதித்தறுவாயில் எதை வேண்டுமானாலும் செய்யலாம். தம்மையே நம்பியிருந்த தமது கட்டுப்பாட்டுப்பகுதி மக்களை பற்றி சிறிது கூடக் கவலை கொள்ளாதவர்கள் அரச கட்டுப்பாட்டுப்பகுதியிலுள்ள மக்களைப்பற்றியோ, சகோதர இன மக்களைப் பற்றியோ சிறிதும் கவலை கொள்ளப் போவதில்லை. தமிழ் மக்களைக் கொன்று சகோதர இன மக்களுடன் முறுகலைத் தோற்றுவித்து அவர்களின் இருத்தல் தன்மையைக் காத்துக் கொள்ளவும் முனையலாம். ஆகவே தமிழ் மக்கள் உட்பட சகோதர இன மக்களும் பயங்கரவாதிகளிடமிருந்து முழுமையாக மீட்புப் பெற விட்டுக் கொடுப்புகளையும், ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

அதே நேரம் இலங்கை அரசாங்கம் பயங்கர வாதிகளின் மீதான தாக்குதலின் போது அப்பாவித்தமிழ் மக்கள் பாதிக்கப்படுவதை இனிமேல் முற்றாகத் தவிர்க்க வேண்டும். அண்மையில் கடற்புலிகளின் தளமென்று கூறி விமானப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் சிறுவர்கள், பெண்கள் உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளனர். இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. படையினரின் இவ்வாறான தவறுகள் பயங்கரவாதிகளுக்கு வலுச்சேர்க்கலாம் என்பதை அரசாங்கமும், படையினரும் மறந்துவிடக் கூடாது.

நன்றி

ஆசிரியர்.

# நாம் தொடர்ந்தும் ஆயுதங்களில் மோகம் கொண்டு அதனை சுமக்க விரும்பவில்லை.

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் கருணா அம்மான்



**கேள்வி:~** ஏ9 பாதையூடாக உணவுப்பொருட்கள் அனுப்ப அரசு முடிவெடுத்தது குறித்தும்.. அதற்கு விடுதலைப்புலிகள் தடை விதித்தது குறித்தும்... இதற்கான தீர்வு குறித்தும்?

**பதில்:~** யாழ் குடாநாட்டு மக்கள் பிரபாகரனின் சுரண்டல்களுக்கு மாத்திரம் தானே தவிர அம்மக்களின் நலனிலோ அவருக்கு எவ்வித அக்கறையும் இல்லை என்பதை இந்நிகழ்வு மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்தியுள்ளது. அம்மக்கள் தம் மக்கள் என்ற உணர்வு பிரபாகரனுக்கு இருந்திருக்குமானால் எவ்வழியிலேனும் அம்மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் கிடைப்பதற்கு தங்களினால் ஆன அனைத்தையும் செய்திருக்க வேண்டும். ஆனால் அதனை விடுத்து கடல் வழியாக உணவுப் பொருட்கள் கொண்டு செல்வதற்கு பாதுகாப்பு உத்தரவாதம் இல்லையென்றார்கள் இப்போது தரைவழியாக கொண்டு செல்லவும் அனுமதி மறுக்கின்றனர். இப்போது இவர்களின் ஒரே நோக்கம் ஏ9 பாதையில் வரி, கப்பம் அறவிட வேண்டும் என்பதே தவிர வேறோன்றுமில்லை. அதேநேரம் நான் இவ்விடத்தில் அரசாங்கத்திற்கு ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். யாழ்ப்பாண மக்களும் இந்நாட்டின் பிரஜைகள் தான். அம்மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும், உணவுப் பொருட்களையும் வழங்க வேண்டியது அரசின் கடமை. எவ்வழியிலேனும் இவை வழங்கப்பட வேண்டும். இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

**கேள்வி:~** வாகரை மக்களின் நிலைமை குறித்து?

**பதில்:~** வாகரையிலுள்ள சுமார் 30.000 மக்கள் இன்று பிரபா குழுவினால் மனித கேடயங்களாகப் பயன்படுத்தப்படுகின்றனர். கிழக்கில் மிகப் பலவீனமாக இருக்கும் பிரபா குழுவினர் இறுதி முயற்சியாகத் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இம்மக்களைக் கேடயங்களாகப் பயன்படுத்துகின்றனர். இம்மக்களை பாதுகாப்பாக பிரபா குழுவினரிடமிருந்து மீட்டெடுக்க வேண்டும். அத்துடன் மக்களுக்கான அனைத்து வசதிகளையும் அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவை தொடர்பாக இலங்கை அரசாங்கம் காலம் தாழ்த்தாமல் உடனடியாக தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும்.

**கேள்வி:~** ஈபிடிபி அமைப்புக் குறித்து உங்கள் கருத்து ? அவர்களுடனான உறவு?...

**பதில்:~** எமது பிரிவின் ஆரம்ப காலத்தில் நாம் ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்கு எமது அறிக்கைகள் செயற்பாடுகளை ஆதரித்து ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் தார்மீக உதவிகள் செய்தார். நாம் அதனை எப்போதும் நன்றியுடன் நினைவு கூருவோம். பிரபாகரனின் அடக்குமுறையிலும், கொலைக் கலாச்சாரத்திலும் பாதிக்கப்பட்ட மாற்றுக் கருத்துடைய கட்சி என்ற வகையில் அவர்களுடனான எம் உறவு குறித்து உரிய தருணம் வரும்போது எமது அரசியல் செயற்குழு நல்லதொரு முடிவை எடுக்கும்.

**கேள்வி:~** உங்களுடன் இணைந்திருந்த ஈஎன்டிஎல்எப் அமைப்பினர் குறித்த உங்கள் கருத்து?

**பதில்:~** இவர்கள் எமது அதிதீவிர களச் செயற்பாடுகளுக்கு ஈடுகொடுத்து செயற்பட முடியாத நிலையிலேயே இவர்களில் பலர் எம்மிடமிருந்து விலகி இந்தியாவுக்கே சென்று விட்டார்கள். அதிதீவிரமாகச் செயற்படக் கூடிய சிலர் எமது அமைப்புடன் இணைந்து செயல்படுகிறார்கள். அதேவேளை இதனை முக்கியப்படுத்திச்சொல்வதற்கோ இவர்களைக் கவனத்தில் கொள்வதற்கோ இது ஒன்றும் பெரிய விடயமல்ல என்று நினைக்கிறேன்...

**யாழ் குடாநாட்டு மக்கள் பிரபாகரனின் சுரண்டல்களுக்கு மாத்திரம் தானே தவிர அம்மக்களின் நலனிலோ அவருக்கு எவ்வித அக்கறையும் இல்லை என்பதை இந்நிகழ்வு மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்தியுள்ளது.**

**கேள்வி:~** தமிழர்விடுதலைக்கூட்டணி புளொட் ஈபிஆர்எல்எப் (நாபாஅணி) ஆகிய மூன்று அமைப்புக்களும் கூட்டாக இணைந்து செயல்படுவது குறித்து உங்கள் கருத்து? அக்கூட்டில் உங்கள் ரிஎம்விபி அமைப்பும் இணைந்து கொள்ளுமா??

**பதில்:~** இக்கூட்டணியை நான் வரவேற்கிறேன். தமிழ்மக்களைப் பொறுத்தவரை இதுவோர் முன்னேற்ற கரமான நல்லதோர் முடிவு. தமிழ் மாற்றுக் கட்சியில் நாங்கள் வேறுபட்ட அமைப்பாக இயங்கி வருகின்றோம். அதாவது நாம் இராணுவ மற்றும் அரசியல் செயற்பாடுகளை இணைத்தே செயல்படுகிறோம். ஏனையோர் முற்றுமுழுதாக அரசியல் செயற்பாட்டில் முழுமையாக தீவிரமாக ஈடுபடுகிறார்கள். அதேநேரம் நாம் தொடர்ந்தும் ஆயுதங்களில் மோகம் கொண்டு ஆயுதத்தைத் தூக்கித் திரிய விரும்பவில்லை. எமது தற்பாதுகாப்புக்காக எம்மீது திணிக்கப்பட்டிருக்கும் ஆயுதங்களை தூக்கியெறியும் காலம் விரைவில் வருமென நம்புகிறோம். காலப்போக்கில் ஏனைய அமைப்புகளுடனான உறவுகள் குறித்தும் கள நிலைமைக்கு ஏற்ப எவ்வாறு செயற்படுவதென்பது குறித்தும் எமது அரசியல் செயற்குழு முடிவெடுக்கும்.

**கேள்வி:~** கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் கொலைகள், ஆட்கடத்தல் குறித்து??

**பதில்:~** கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் கொலைகள், ஆட்கடத்தல் எமக்கு பெரும் கவலையையும், வேதனையையும் அளிக்கின்றது. கிழக்கு மாகாணம் என்று மட்டுமல்ல வட மாகாணத்தில் இடம் பெறுவதையும் தான். இவையனைத்திற்கும் காரணம் பிரபாகரனும், பொட்டனும் தான். கிழக்கில் நாம் மிகப் பலம் பெற்றுள்ளதாலும் மக்களிடம் எமக்கு பெரும் ஆதரவு இருப்பதாலும் திட்டமிட்டு படுகொலைகள் மேற்கொண்டு இனவன்முறைகளைத் தோற்றுவிப்பதே அவர்களின் நோக்கம். ஆனால் இதற்கு நாமும், எம் மக்களும் இடம் கொடுக்கப் போவதில்லை.

**கேள்வி:~** காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலை உங்களின் தலைமையில் நடைபெற்றதாகக் கூறப்படுகிறதே இது உண்மையா? இது குறித்து??

**பதில்:~** இது அபத்தமான குற்றச்சாட்டு சகோதர இனமக்களுக்கெதிரான எத்தாக்குதலும் நாம் என்றுமே மேற்கொண்டதில்லை. இதனை என்னால் உறுதியாகக் கூற முடியும். 1990 ஆம் ஆண்டு பிரேமதாச அரசுடனான தேனிலவுக் காலம் முடிவுக்கு வந்த பின் மோதல்கள் ஆரம்பமான சமயம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதற்காக பாரிய இராணுவ நடவடிக்கையொன்றிற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. இதனால் அரசாங்கத்தின் கவனத்தை திசைதிருப்ப கிழக்கில் பாரிய சகோதரப் படுகொலைக்கு பிரபாகரன் உத்தரவிட பொட்டனின் நேரடிக் கண்காணிப்பிலேயே காத்தான்குடி பள்ளிவாயல் படுகொலையும், ஏறாவூர் படுகொலையும் எல்லைப்புற சிங்கள மக்கள் மீதான படுகொலைகளும் இடம் பெற்றன. படுகொலைகள் இடம்பெற்ற பின் பொட்டன் இதனை நேரடியாகவே என்னிடம் கூறினார். ஆனால் அக்கொடூரங்கள் இடம்பெற்ற சமயம் நானும் அவ்வியக்கத்தில் இருந்தேன் என்பதற்காக வேதனையடைகிறேன்.

கேள்வி:~ வடகிழக்கு முஸ்லிம் மக்கள் குறித்து உங்கள் கருத்து??

கருணாஅம்மான்:~ முஸ்லிம் சகோதரர்கள் தொடர்பான எமது நிலைப்பாடு தெளிவானதும், உறுதியானதும் ஆகும். முஸ்லிம் மக்கள் எம் சகோதர மக்கள் அவர்கள் தமது தாயக பூமியில் அச்சமற்ற, நிம்மதியான அனைத்து அடிப்படை உரிமைகளுடன் வாழ வேண்டும். ஒரு இனத்தின் தனித்துவங்களும், அரசியல் அபிலாசைகளிலும் இன்னொரு இனம் குறுக்கீடு செய்யக் கூடாது. முஸ்லிம் மக்களின் சுயநிர்ணய உரிமைகளையும், அரசியல் அபிலாசைகளையும் நாம் ஏற்றுக் கொள்கிறோம். முஸ்லிம்கள் மட்டுமன்றி கிழக்கில் வாழ்கின்ற சிங்கள மக்களுக்கான அரசியல் அபிலாசைகளையும் நாம் ஏற்றுக் கொள்கிறோம். கிழக்கில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களாகிய மூவின மக்களும் வாழ்கின்றனர். இம்மக்கள் புரிந்துணர்வுடனும், நிம்மதியாகவும் சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும். இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் போது அது அனைத்தின மக்களினதும் அரசியல் அபிலாசை க்ளைப் உறுதி செய்யக் கூடியதாகவும் அனைவரையும் திருப்திப் படுத்துவதாயும் இருக்க வேண்டும். பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம் களின் தனித்தரப்பு பிரசன்னத்திற்கு நாம் ஆதரவு தெரிவிக்கிறோம். எம்மக்களுக்குண்டான அனைத்து உரிமைகளும் அவர்களுக்கும் உண்டு.

# உரிமைகளைப் பேண அரசியல் தலைமைத்துவம் அவசியம்.

உத்தமன்



1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இலங்கை~இந்திய ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் பேசும் மக்களின் பூர்வீக நிலமான வடக்கு~கிழக்கு இணைக்கப்பட்டது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் வடக்கு~கிழக்கை இணைப்பது மட்டும்தான் சரத்தல்ல. பல சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டு இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளின் நலன்களும் அதில் உள்ளடக் கப்பட்டிருந் தன. இலங்கை~இந்தியா ஒப்பந்தம் கைச்சாத்தாகி 19 வருடங்கள் சென்ற நிலையில் பலர் இன்னும் வடக்கு~கிழக்கு இணைப்பு மட்டும் தான் இந்திய இலங்கை ஒப்பந்தம் என்று எண்ணுவதுதான் வேடிக்கை. புலிகள் ஆயுதங்களை கைவிட்டு வன்முறைகளையும் விட்டு விட்டு ஜனநாயக அரசியலில் இணைய வேண்டும் என்பதும் அவ்வொப்பந்தத்தின் முக்கிய சரத்தாக இருந்தது. ஆனால் இன்று வரை அதுநடைபெறாமல் புலிகளின் வன்முறை களும், தாக்குதல்களும் அதிகரித்து பல்லாயிரம் உயிர்கள் பறிக்கப்பட்டு வரும் நிலையில் அதற்கெதிராகக் குரல் கொடுக்காமல் வடக்கு~கிழக்கு இணைப்பில் மட்டும் பலர் கவலைப்படுகின்றனர்.

வடக்கு~கிழக்கானது தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய, பூர்வீக பூமி என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். அதில் மாற்றுக் கருத்திற்கோ, மறுப்பதற்கோ இடமில்லை. இலங்கை இந்திய ஒப்பந்தம் கூட இணைக்கப்பட்ட வடக்கு~கிழக்கானது ஒரு இடைக்காலத் தீர்வுதான் எனவும், அதனை நீடிப்பதா? இல்லையா? என்பதை அப்பகுதி மக்களிடம் சர்ஜன வாக்கொடுப்பொன்றை நடத்துவதன் மூலம்தான் தீர்மானிக்க முடியும் எனவும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று வரை அச் சர்வஜன வாக்கெடுப்பு நிகழ்த்தப்படவில்லை. இவ்வொப்பந்தமானது இதுவரை ஐந்து நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிகளையும் கண்டுவிட்டது. ஆனால் எந்த ஜனாதிபதியும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தாமல் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி இணைப்பை பிற்போட்டுக்கொண்டே வந்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் தான் மக்கள் விடுதலை முன்னணி இணைந்த வட~கிழக்குக்கு எதிராக உயர் நீதிமன்றத்தை அணுக 2006~ஒக்டோபர் 16ஆம் திகதி வட~கிழக்கு இணைக்கப்பட்ட விதம் சட்டவிரோதமானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்க அதன் பிரகாரம் ஜனவரி 01ஆம் திகதியில் இருந்து வடக்கு~கிழக்கு தனித்தனி மாகாண சபையாகவே இயங்கும் என அரசாங்கமும் அறிவித்தது. இவ்வருடத்திற் கான வரவு~செலவு திட்டத்தில் கூட வடக்கு~கிழக்கு மாகாண சபைகளுக்கு அரசு தனித்தனியாகவே நிதிகளை ஒதுக்கியுள்ளது. அத்துடன் நிருவாகக் கட்டமைப்புக்கள் தனித்தனியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இணைந்த வட~கிழக்கின் ஆளுனராக இருந்த ரியல் அட்மிரல் மொஹான் ஜெயவிக்கிரம, கிழக்கு மாகாண ஆளுனராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் வடக்கு மாகாணத்திற்கு பிறிதொரு ஆளுனர் நியமிக்கப்படும் வரை பதில் ஆளுனராகவும் அவரே கடமையாற்றுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இரு

**அரசாங்கம் இப்போது கிழக்கு மாகாணத்தில் மேற்கொண்டு வருகின்ற நிர்வாக, அதிகார மாற்றத்தை மேலதிக சில பிரத்தியேக அதிகாரங்களுடன் அரசியல் தலைமையொன்றிடம் வழங்குமானால் அது மக்களின் வாழ்வாதாரங்களிலும், சமூக மட்டத்திலும் பாரிய அபிவிருத்தியை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் பிரபாகரனின் பயங்கரவா தத்திற்கும் கடைசி ஆணியை அடிக்கும்**

மாகாணங்களுக்குமிடையிலான தலைமைச் செயலாளர்களை நியமிக்கும் பணியும் நடைபெற்று வருகின்றது. கிழக்கு மாகாணத்திற்கு தலைநகராக திருகோண மலையும், வடக்கு மாகாணத்திற்கு தலைநகராக வவுனியாவும் இயங்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறாக வடக்கு கிழக்கானது தனித்தனி மாகாணங்களாக இயங்குவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டாகிவிட்டுது. வடமாகாணம் தனியான நிருவாகக் கட்டமைப்பாக இயங்குவதற்கு சிறிது காலதாமதமாகும். கிழக்கில் அப்பணி துரிதமாகவே இடம் பெற்று வருகின்றது வட~கிழக்கு இணைப்புக்கெதிரான உயர் நீதிமன்றத்தீர்ப்பு தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு சாதாகமானதா பாதக மானதா என்ற விமர்சனங்களுக்கு அப்பால் அம்மக்களின் கருத்தறிவதற்க்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்பதுதான் உண்மை. கடந்த கால அரசாங்கங்களும், அம்மக்களின் கருத்தறியாமல் வட~கிழக்கு இணைப்பை நீடித்து வந்தன. இவ்வரசாங்கமும் அம்மக்களின் கருத்தறியாமல் வடக்கு~கிழக்கை பிரித்துள்ளது. எவ்வாறாயினும் இவை தொடர்பில் அறுதியாகவும், இறுதியாகவும் முடிவெடுக்கும் உரிமை அம்மக்களுடையதே.

வடக்கு~கிழக்கு இணைப்பிற்கெதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது கிழக்கு மக்களின் அடிப்படையுரிமைகள் மீறப்பட்டுள்ளது என்பது தொடபர்காகவே. இப்போது வட~கிழக்கு தனியான நிருவாகக் கட்டமைப்புகளுடன் இயங்கும் போது அப்பகுதி மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமா? இல்லையெனில் எவ்வாறான சந்தர்ப்பத்தில் அம்மக்களின் உரிமைகளை முழுமையாகப் பேணவும், பாதுகாக்கவும் முடியும்? என்பதே இன்று பல்வேறு மட்டங்களிலும் காணப்படும் முக்கிய விவாதமாக உள்ளது.

1987 ஆம் ஆண்டு வட~கிழக்கு இணைக்கப்பட்டதும் அதன்பிறகு ஆட்சிக்கு வந்த அரசுகள் வேண்டா வெறுப்பாக இவ்விணைப்பிற்கு அங்கீகாரம் வழங்கியது. அதற்குப் பிரதான காரணம், அன்றிருந்த புலிகளின் இராணுவ ரீதியான பலமும், வட~கிழக்கைப் பிரித்தால் புலிகளுன் தாக்குதல்களும், வன்முறைகளும் அதிகரிப் பதுடன் சமாதானப் பேச்சிற்கான வாய்ப்புகளும் இல்லாமல் போகும் என்ற அச்சம்தான் மக்களின் விருப்பத்தையும் புறக்கணித்து வந்துது. ஆனால் இப்போது புலிகளின் இராணுவ பலமானது எவ்வாறான நிலையிலுள்ளது என்று அனைவரும் அறிந்த விடயம் தான். கிழக்கில் புலிகள் மிகவும் பலவீனப்பட்டு விரட்டப்பட்டு வருகின்றனர். 2004 ஆம் ஆண்டிற்கு முன் கிழக்கில் பெரும்பகுதியை தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர்கள் இப்போது வாகரை, தொப்பிக்கலை, கரடியனாறு, கஞ்சுகுடிச்சாறு என்று தமது பலத்தையும், பகுதிகளையும் மட்டுப்படுத்தியுள்ளனர். இதில் வாகரையும் மிக விரைவில் பறிபோய்விடும் நிலையே



உள்ளது. இப்போது கிழக்கில் 90 வீதமான பகுதிகள் மீட்கப்பட்டு விட்டன. இதனால் தான் அரசாங்கம் கிழக்கில் முதலில்

**வடக்கு~கிழக்கானது தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய, பூர்வீக பூமி என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். அதில் மாற்றுக் கருத்திற்கோ, மறுப்பதற்கோ இடமில்லை.**

நிருவாகக் கட்டமைப்பை ஏற்படுத்தி அதனை நடைமுறைப்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றது.

இப்போது கிழக்கிலே ஏற்படுத்தப் பட்டிருக்கின்ற நிருவாகக் கட்டமைப்பானது. அதிகாரிகள் மட்டத்திலேயே மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. அதிகாரிகள் மட்டத்திலான நிருவாக முறையில் மாத்திரம் நிருவாகக் கட்டமைப்பு பூர்த்தியாகி விடமாட்டாது. மக்களின் உரிமைகளையும், அரசியல் அபிலாசைகளையும் அதிகாரிகள் மட்டத்தினால் பூரணமாக பேணவோ, பாதுகாப்பதோ சாத்தியமற்ற விடயம். என்று கிழக்கு மாகாணத்தின் அதிகார நிருவாகக் கட்டமைப்பானது அரசியல் தலைமைத்துவ மொன்றின் கீழ் கொண்டு வரப்படுகின்றதோ அன்று தான் அது பூரணத்துவமடையும்.

இலங்கையில் தற்போதுள்ள ஒன்பது மாகாண அலகுகளில் வடக்கு~கிழக்குத் தவிர ஏனைய ஏழு மாகாணங்களும் அரசியல் தலைமைத்துவங்களினால் வழிநடாத்தப் படுகின்றன. ஆனால் கடந்த 17 வருடங்களாக வடக்கு~கிழக்கு மட்டும் அதிகாரிகளினால் தான் வழிநடாத்தப் படுகின்றது. இவ்வேறுபாடு ஏனைய மாகாணங்களை விட கல்வி, பொருளாதார, சமூக அபிவிருத்திகளில் வடக்கு~கிழக்கு மாகாணம் பின்தங்கியுள்ளதை உணர்த்து கிறது. அரசியல் தலைமைத்துவங்களினால் மாத்திரம் தான் மக்களின் விருப்பு, வெறுப்பிற்கேற்ப செயல்பட முடியும். மக்களின் விருப்பங்கள் அபிலாசைகளை பிரதிபலிக்க முடியும். மக்களின் விருப்பங்கள், அபிலாசைகள் புறக்கணிக் கப்படும் போது அரசியல் தலைமைத்து வத்தை மாற்றக்கூடிய சந்தர்ப்பங்களும் மக்களுக்கு கிடைக்கும்.

அது மட்டுமன்றி, வடக்கு~கிழக்குப் பகுதியானது நாட்டின் ஏனைய பகுதிகளை விட யுத்தம், இயற்கை அழிவுகளினால் பெரும் பாதிப்பை கண்டுள்ளது. 20 வருட கால கொடிய யுத்தம் தன் எச்சங்களாக வறுமையையும், கல்வியில் பின்தங்கிய நிலைமையையும், அனாதைகளையும், விதைவைகளையும் விட்டுச் சென்றிருக்கின்றது. எனவே இப்பிராந்தியத்தில் பொருளாதார, சமூக அபிவிருத்தி ஏற்பட்டு இங்கு வாழ்கின்ற மக்களும் நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் நிலைக்கு உயரவேண்டுமானால் இப்பகுதிகளுக்கு ஏனைய பகுதிகளை விட சில பிரத்தியேகமான அரசியல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். இவ்வரசியல் அதிகாரங்கள் அரசியல் தலைமைத்துவ மொன்றினூடாக வழங்கப்பட்டால் மாத்திரம் தான் அப்பெறுபேறுகளை மக்கள் நுகர முடியும்.

அரசாங்கம் இப்போது கிழக்கு மாகாணத்தில் மேற்கொண்டு வருகின்ற நிர்வாக, அதிகார மாற்றத்தை மேலதிக சில பிரத்தியேக அதிகாரங்களுடன் அரசியல் தலைமை யொன்றிடம் வழங்குமானால் அது மக்களின் வாழ்வாதாரங்களிலும், சமூக மட்டத்திலும் பாரிய அபிவிருத்தியை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் பிரபாகரனின் பயங்கரவா தத்திற்கும் கடைசி ஆணியை அடிக்கும். கிழக்கு மாகாணத்தில் அரசியல் தலைமைத்துவமொன்றினூடாக அம்மக்களின் வாழ்வில் கல்வி, பொருளா தார, சமூக ரீதியில் புரட்சி ஏற்படும் போது அது வட மண்ணிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இவ்வாறான ஒரு நிலைமை தமக்கு ஏன் இல்லையென்ற வினா எழும்பும் போது அவ்வினாவின் பரிமாண வளர்ச்சி பிரபா குழுவிற்கும் அம்மக்களுக்கு மிடையிலான இடைவெளியை அதிகப் படுத்தும். இதனால் தமது முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும் பயங்கரவாதத்தை அம்மக்களே காட்டிக் கொடுக்க முன்வருவர். இதன் மூலம் பிரபாகரனின் பயங்கரவாத போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.


ஆக, அரசாங்கம் இப்போது கிடைத்துள்ள இவ்வரிய வாய்ப்பை பயன்படுத்தி கிழக்கு மாகாணத்துக்கான நிருவாக, அதிகார கட்டமைப்புக்களை உறுதியான சகோதர இன மக்களுடனும், நட்பு பாராட்டக்கூடிய அரசியல் தலைமைத்துவத்திடம் சில பிரத்தியேக அதிகாரங்களுடன் வழங்குமானால் அது கிழக்கு மக்களின் உரிமையைப் பேணுவதுடன் பயங்கரவாதத்தையும் தமிழ் மக்களிடம் இருந்து துடைத்தெறியும்.



# போராளிகளுடன் அந்த இருநாட்கள் பத்திரிகையாளனின் நேரடிக் கள அனுபவம்

03

புலவன்



எம் பயணத்தின் இரண்டாம் நாளிரவும் பொறுப்பாளர் அஜித்தின் தளத்தில்தான் தங்கினோம். அன்றிரவு மீண்டுமொரு தடவை மண் மணம் கமழும் சோறும், மரக்கறியும், மீன்குழம்பும் சாப்பிடக் கிடைத்தது. அதனை எழுதும் போது கூட அச்சுவை நாக்கில் நிழலாடுகின்றது. சாப்பிட்டு விட்டு தமக்கென அமைக்கப்பட்டிருந்த கொட்டகையில் நான் சிறப்புத் தளபதி பிள்ளையான், தளபதி ஜெயம் ஆகியோருடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அன்று மாலையில்தான் மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் காரியாலயம் ஒன்று திறந்து வைக்கப் பட்டிருந்தது. ஏற்கனவே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியான வளர்சியினால் திணறிக் கொண்டிருக்கும் பிரபா குழுவினர் அரசியல் வளர்சியைக் கண்டதும் நடுங்குகின்றனர். இதனால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் வளர்ச்சியை தடுக்க வன்முறைகளையும், கொலைகளையும் அதிகரித்து வருகின்றனர். மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனையில் அரசியல் அலுவலகம் திறந்த சமயம் பிரபா குழுவினர் அப்பகுதியை நோக்கி மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் பல பொதுமக்கள் படுகாயமடைந்த செய்தி கேள்விப்பட்டவுடன் பெரும் கவலையாக இருந்தது.

அன்றிரவு அங்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அரசியல் பொறுப்பாளர் தூயவன் வருகை தந்தார். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளினமைப்பில் முதன் முதலில் எனக்கு பரிச்சயமானவர் அவர்தான். ஆரம்ப காலத்தில் நாமிருவரும் ஒன்றாக சில காலம் தங்கியிருந்தோம். மிக உற்சாகமான நபர். பிறருடன் அன்பாக பழகக் கூடிய அவர் அங்கு வந்ததும் அவருடன் பல விடயங்கள் குறித்து உரையாட முடிந்தது. முறக் கொட்டாஞ்சேனை அரசியல் செயலகத் திறப்பில் அவரும் கலந்து கொண்டதனால் அங்கு இடம்பெற்றவைகளை சிறப்புத்தளபதி பிள்ளையான், தளபதி ஜெயமும் கேட்டறிந்து கொண்டனர். அன்றிரவு அவரும் அங்குதான் தங்கினார். எமது கொட்டகையின் அருகில் இருந்த மரத்தின் கீழ் மின்குமிழின் வெளிச்சத்தில் நான் கொண்டு சென்ற புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தேன். வாசிப்பு என்னில் இருந்து பிரிக்க முடியாத ஒரு அங்கம். இரவு நெடுநேரமாக நான் புத்தகம் வாசித்துக் கொண்டிருக்க யாரோ மறு கொட்டகையில் இருந்து மின் குமிழை அணைக்கும் படி உரத்த குரலில் கூறினார். உடனே எமது கொட்டகைக்கு வெளியே காவலுக்கு நின்ற தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான ஜெயந்தன் நிலைமையை விளக்க புத்தகம் வாசிக்க எனக்கு எத்தொந்தரவும் இருக்க வில்லை. சிறிது நேரத்தில் எனக்கும் தூக்கம் வர நான் தூங்கச் சென்றேன். முதல்நாள் போர்வையில்லாததால் நன்றாகத் தூங்கக் கிடைக்கவில்லை என்பதினால் தளபதி ஜெயம் எனக்கு ஒரு போர்வைக்கு உடனடியாக ஏற்பாடு செய்து தந்தார். அதனால் என்னால் மிக நிம்மதியாக தூங்க முடிந்தது.

வழமை போன்று காலையில் சிறப்புத் தளபதியார் நேரத்துடன் எழும்பிவிட நானும் எழுந்து கொண்டேன். மன்னிக்க வேண்டும் என்ற குரலுடன் போராளியொருவர் சுடச்சுட தேனீர் தர குளிரான அந்தப் பொழுதில் இதமாக இருந்தது. இன்றுதான் எனது பயணத்தின் நோக்கம் நிறைவேறுவதாக இருந்தது. எனது பயணத்தின் பிரதான நோக்கமாகவிருந்தது எமது அரசியல் போராளிகளுடன் சமகால அரசியல் தொடர்பான கலந்துரையாட லொன்றை மேற்கொள்வதே அதற்காக சகல

**கிழக்கில் தமிழ் மக்கள் ஏனைய மக்களைப் போல சமூக, பொருளாதார, கல்வி, அபிவிருத்திகளில் முன்னேற்றமடைய வேண்டுமெனவும், கிழக்குத் தமிழ் மக்களின் தனித்துவமான அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவும் கிழக்கு தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமைத்துவமொன்று மிக அவசியம். காலத்தின் கட்டாயம் என்பதையும் அனைவரும் உரத்துக் கூறினர்.**

ஏற்பாடும் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அறியக் கிடைத்தது. நாமிருக்கும் இடத்திலிருந்து கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் வேறொரு தளத்திற்கு செல்வதற்காக அவசரமாக ஆயத்தமாக வேண்டும் என சிறப்புத் தளபதி பிள்ளையானினால் ஏற்கனவே எனக்கு கூறப்பட்டிருந்தது. இந்நிலையில் அங்கு வந்த களப் பொறுப்பாளர் அஜித் காலையுணவை உண்டுவிட்டுத்தான் கிளம்ப வேண்டும் என்று கூறினார். பிட்டும் மீன் சொதியும் ஏற்பாடு செய்வதாக அவர் கூற எனக்கு சாப்பிட்டு விட்டே போகலாம் போல இருந்தது. எனவே நான் சாப்பிட்டு விட்டே செல்வது என விரும்பினேன். காலைக் கடன்களை முடித்து விட்டு நாம் காலைச் சாப்பாட்டிற்கென காத்திருக்க சிறிது தாமதமாகவே சிறப்புத்தளபதி பிள்ளையானும், தளபதி ஜெயமும் கருத்தரங்கிற்கான மேலதிக ஏற்பாடுகளை கவனிக்கச் சென்று விட்டனர். உண்மையிலேயே காலைச் சாப்பாட்டை உண்ணும் பாக்கியம் அவர்களுக்கு கிடைக்கவில்லை. ஆவிபறக்கும் பிட்டும், சுடச் சுட மீன் சொதியும் அவ்வளவு சுவையாக இருந்தது.

காலை ஆகாரம் முடிந்த பின் வாகரைப் பகுதிப் பொறுப்பாளர் சூட்டிகரன் வாகனமொன்றில் எம்மை அழைத்துச் செல்ல பொறுப்பாளர் அஜித்தின் தளத்துக்கு வருகை தந்தார். அவரும் அங்கே காலையுணவை உண்டுவிட்டு எம்மை அழைத்துக் கொண்டு செல்லத் தயாரானார். என்னுடன் ஈழமாறன் அண்ணன் உட்பட சில போராளிகள் வானில் ஏற வான் பறந்தது. சிறிது நேரத்தின் பின் அடர்ந்த மரங்களுக்கு மத்தியில் அமைந்திருந்த இராணுவத் தளம் ஒன்றிற்கு அருகில் சென்று நின்றது. அவ்விடம் பார்ப்பதற்கு மிக அழகாகவும், அடர்த்தியாகவும் இருந்தது. ஒரு ஒழுங்கையினூடாக நாங்கள் நடந்து சென்று அவ்விராணுவத் தளத்தின் முன்புற வாயிலை அடைந்தோம். அடர்ந்த உயர்ந்த மரங்களுக்கு மத்தியில் மிகப் பாதுகாப்புடைய பல இராணுவ முகாம்களை கொண்டிருந்தது அவ்விராணுவத் தளம். நாம் அங்கு செல்லும் போது பல வாகனங்கள் அங்கே வந்து நின்றன.


நான் சென்றபின் அத்தளத்திற்கு முன்பாகவே தளபதி ஜெயம் கதிரையொன்றில் அமர்ந்து கொண்டு சிலருடன் உரையாடிக் கொண்டிருந்தார். அவர் மெல்ல புன்முறுவல் பூத்து என்னை வரவேற்றார். அங்கே திருமலைத் தளபதி மார்க்கன், மருத்துவப் பொறுப்பாளர்கள் பகீரதன், சுதன் ஆகியோர் இருந்தனர். எனக்கும் அவர்களுக்கருகில் ஆசனம் ஒன்றை ஒதுக்க அங்கே நான் உட்கார்ந்து கொண்டேன். காலை வெயில் இதமாக இருந்தது. சமகால நிலைமைகள் தொடர்பாகவும், இயக்கம் தொடர்பாகவும் பல விடயங்களைப்பற்றி நாங்கள் அச்சிறிது நேரத்தில் உரையாடிக் கொண்டிருந்தோம். அப்போது இன்னும் பல போராளிகள் அங்கே வந்து அவர்களும் எமது பேச்சில் கலந்து கொண்டனர். அச்சமயம் அங்கு வந்த புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் சீலன் ஜெயம் அண்ணனையும், என்னையும் தவிர மற்றவர்களனைவரையும் சிறப்புத் தளபதி பிள்ளையான் வரும்படி கூறியதாக கூற அனைவரும் சென்று விட நானும், தளபதி ஜெயமும் அங்கு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்போது அங்கே வந்த சிறப்புத் தளபதி பிள்ளையான் எம்மையும் வரும்படி அழைத்தார்.

நீளமான ஓலையினால் வேயப்பட்ட மண்டபமொன்றினுள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகள், பொறுப்பாளர்கள் அமர்ந்திருக்க சிறப்புத் தளபதி பிள்ளையான் மறைந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி விட்டு இக்கருத்தரங்கு ஆரம்பமாகும் எனக் கூறினர். ஒரு நிமிடம் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு கருத்தரங்கு ஆரம்பமானது. அனைவருக்கும் வணக்கம் கூறிவிட்டு நான் முன்னால் சென்று கருத்தரங்கை ஆரம்பிக்கும் முகமாக சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக உரையாட ஆரம்பித்தபோது கீழே தரையிலே சிறப்புத் தளபதி பிள்ளையான், தளபதி ஜெயம் ஆகியோரும் போராளிகளுடன் இணைந்து செவிதாழ்த்துவதைக் கண்ட போது எனக்கு மிகவும் ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. எவ்வித பாகுபாடுமின்றி, பந்தாவில்லாமல் முதன் நிலைத் தளபதிகள் இருவரும் உட்கார்ந்திருந்தனர். போராளிகள் மிக மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் இருந்தனர். பின் வரிசையில் கிழக்கு மாகாண அரசியல் பொறுப்பாளர் பிரதீப், நிதிப் பொறுப்பாளர் பாரதி, திருமலைத் தளபதி மார்க்கன், திருமலை அரசியல் பொறுப்பாளர் மங்களன், மருத்துவப் பொறுப்பாளர் பகீரதன் போன்ற தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களும் அமர்ந்திருந்தனர்.

இலங்கையின் சமகால நிலைமைகள் தொடர்பாக ஆரம்பமான கருத்தரங்கில் நான் என்னால் இயன்றளவு சமகால அரசியல் நிலைமை தொடர்பாகவும், இலங்கையின் இனப்பிரச்சினையின் மையம், வரலாறு நெடுகிலும் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்த வரலாறு, ஈழப் போராட்டம் உத்வேகமடைந்தமை போன்றவற்றை சுமார் நான்கு மணி நேரமாக விளக்கினேன். தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் உள்ளிட்ட அனைவரும் ஆர்வமாகவும், உன்னிப்பாகவும் கவனித்துக் கொண்டிருந்தார்கள். மதிய நேர உணவுக்காக சிறிது நேரம் ஓய்வு வழங்கப்பட அனைவரும் அன்பாக உரையாடிக் கொண்டிருந்தனர். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளில் எனக்கு சில முக்கிய பொறுப்பாளர்களை சந்திக்க வேண்டும் என்பது என் அவாக்களில் ஒன்றாக இருந்தது. திருமலைப் பொறுப்பாளர் மகிளன், அம்பாறைப் பொறுபாளர் சிந்துஜன், குடும்பிமலைப் பொறுபாளர் சின்னத்தம்பி போன்றோரை சந்தித்து உரையாட வேண்டும் என்பதும் அதில் ஒன்று. இவர்களை காணாமலேயே தொலைபேசியில் அதிக நேரம் உரையாடியிருக்கிறேன். ஆனால் விரைவில் நாம் சந்திப்போம் என்று ஒருவருக்குமே தெரியாது. முதன்முதலில் மதிய உணவு வேளையில் திருமலைப் பொறுப்பாளர் மகிளனையும், அம்பாறைப் பொறுப்பாளர் சிந்துஜனையும் தளபதி ஜெயம் அவர்கள் அறிமுகம் செய்து வைத்த போது மிக மகிழ்ச்சியாக இருந்தது. சிறிது நேரம் சினேக பூர்வமாக உரையாடினோம். மதியநேர ஓய்வு முடிந்த பின் கருத்தரங்கு தொடர்ந்தும் ஆரம்பமானது. மதிய உணவுநேர ஓய்வின் பின்னரான கருத்தரங்கில் முக்கிய தொனிப்பொருளாகவிருந்தது கிழக்கு தமிழ் மக்களுக்கு தனித்துவமான அரசியல் தலைமைத்துவமொன்று தேவைதானா என்பதே. மிகக் கனமான இத்தலைப்பின் கீழ் கிழக்கு மண்ணில் வாழ்கின்ற தமிழ் மக்களின் பொருளாதார, சமூக, கல்வி, அபிவிருத்தி போன்றவற்றில் காணப்படும் பின்னடைவுகளும், அவற்றிற்கான காரணங்களும் ஆராயப்பட்டன. தமிழ் கட்சிகளின் அரசியல் தலைமைத் துவங்கள் எவ்வாறு கிழக்கு மண்ணை பிரித்து வைத்துள்ளது என்பதையும், தமது வாக்குவேட்டைக்காக மட்டுமே கிழக்கு மக்களைப் பயன்படுத்துவதையும் உரத்த தொனியில் சில குரல்கள் கூறின. கிழக்குத் தமிழ் மக்களைப பிரதிநிதித்துவப்படுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றம் சென்றுள்ள போதும், அவர்களுக்கென வழங்கப்படும் பண்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒரு ரூபாய் தானும் இன்று அல்லல்படும் மக்களுக்கு ஒதுக்கப்படவில்லை என்ற கசப்பான உண்மைகள் ஓங்கி ஒலித்தன. எனவே கிழக்கில் தமிழ் மக்கள் ஏனைய மக்களைப் போல சமூக, பொருளாதார, கல்வி, அபிவிருத்திகளில் முன்னேற்றமடைய வேண்டுமெனவும், கிழக்குத் தமிழ் மக்களின் தனித்துவமான அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவும் கிழக்கு தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமைத்துவமொன்று மிக அவசியம். காலத்தின் கட்டாயம் என்பதையும் அனைவரும் உரத்துக் கூறினர். இவ்விணக்கத்துடன் முதல் நாள் அமர்வு இனிதே நிறைவுக்கு வந்தது.

அன்றிரவு நான், சிறப்புத் தளபதி பிள்ளையான் உட்பட ஒரு குழுவினர் குடும்பிமலைப் பொறுப்பாளர் சின்னத்தம்பியின் தளத்தில் தங்குவது என சிறப்புத் தளபதி கூறினார். கருத்தரங்கு நடைபெற்ற அதே மண்டபத்திலேயே நாம் தங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது பெரிய மண்டபம். அதனை ஒவ்வொரு இடமாகப் பிரித்து எமது உடமைகளை வைத்துக் கொண்டோம். கருத்தரங்கு முடிந்த பின் பல போராளிகள் பல விடயங்கள் தொடர்பாக ஆர்வமாகவும்; அக்கறையாகவும் உரையாடிக் கொரண்டிருந் தனர். அவர்களின் ஆர்வத்தை கண்டவுடன் எனக்கும் ஈர்ப்பு ஏற்பட்டு நானும் அவர்களுடன் இணைந்து கொண்டேன். வயது வித்தியாசமோ, பதவி நிலையோ, தடையில்லாமல் தமக்குத் தெரியாததை தெரிந்து கொள்ள அனைவருமே ஆர்வம் காட்டினர். எம்முடன் இருந்த தளபதி ஜெயம் அவர்கள் அன்றிரவு மார்க்கண்ணனின் தளத்தில் தங்குவதற்கு சென்றுவிட்டார். அன்றிரவு நாம் பேசிக் கொண்டிருக்கும் போது அத்துயரமான செய்தியை அறியக் கிடைத்தது.

(தொடரும்)



# ஐரோப்பிய மண்ணில் ஒலித்த தாயக மக்களுக்கான உரிமைக்குரல்

## ஸ்ருட்காட் தீர்மானங்கள்

### பகுதி - 03

முதலாவது நாள் மாநாட்டின் மதிய உணவு நேரத்திற்கு பின்னர் இடம்பெற்ற சிவலிங்கம் அவர்களது உரையை தொடர்ந்து கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. ரி.பி.சி. வானொலி அறிவிப்பாளர்களில் ஒருவரான போல் பிரகலாதன் தனது கருத்தை தெரிவிக்கையில் புலிகளது பாஸிஸ சூழலை தோற்கடிப்பதாயின் நாம் ஒவ்வொருவரும் தத்தமது கட்சி பின்புலங்களுக்கு அப்பால் கருத்து சுதந்திரத்தை மதிக்கின்ற ஒரு ஜனநாயக மையத்தை நோக்கி நாம் நகருதல் வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இந்த உரையாடல்களின் பின்னர் முஸ்லிம்கள் தொடர்பான நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

**வடகிழக்கில் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்**

முஸ்லிம்களின் சார்பில் மேற்படி தலைப்பில் சட்டத்தரணி பக்ஷீர் அவர்கள் உரையாற்றினார். இவர் நீண்டகாலமாக இங்கிலாந்து நாட்டில் வாழ்ந்து வருவதோடு அங்கிருந்துகொண்டே முஸ்லிம் மக்கள் தகவல் மையம் எனும் ஒரு அமைப்பினை நடாத்தி வருகின்றார். இவரது உரை தற்போதைய சூழ்நிலையில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் அரசியல் சிக்கல்களை விலாவாரியாக முன்வைத்ததோடு தமிழர் பிரச்சனைக்கு முற்பட்ட காலத்திலிருந்தே முஸ்லிம்கள் எதிர்கொண்ட அரசியல் சூதுகளை தொட்டுகாட்டியது. அதாவது காலணித்துவ ஆட்சிகாலத்தில் போத்துக்கேயரால் தெற்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் நெருக்கடிக்குள்ளானமை, 1915 ஆம் ஆண்டில் சிங்கள பேரினவாதிகளால் முஸ்லிம்களின் வாழ்வு மீது ஏற்படுத்தப்பட்ட இனக்கலவரங்கள் வடிவிலான அழித்தொழிப்புகள் என்பவற்றை வரிசைப்படுத்தியிருந்தார்.

அந்த தொடர்ச்சியில் சிங்கள பேரினவாதிகளுடன் இணைந்து தமிழ் மக்களின் முன்னாள் தலைமைகள் முஸ்லிம் எதிர்ப்பு மனோநிலையில் செய்த துரோகங்களையும் அவர் விவரித்தார். சேர்.பொன்.பொன்னம்பலம் காலத்தில் உருவாகிய இந்த தமிழ் மேலாதிக்க மனோநிலை இன்ற மூதூரில் வந்து நிற்பதை வரலாற்று தொடர்ச்சிகளினூடு அவர் அவையிலிருந்தோர்க்கு புரியவைத்தமை மிக சிறப்பாயிருந்தது. ஒரு மனித உரிமைவாதியாக மட்டுமல்ல ஒரு ஆவண காப்பாளராக நடைபெறுகின்ற அவரது செயற்பாடுகளின் பின்னணிபலம் அவரது உரையில் தாக்கம் செலுத்தியிருந்தமையை அவதானிக்க முடிந்தது. முஸ்லிம் தரப்பினருக்கு உரிய இடம் ஏற்றுக்கொள்ளபடாமல் இலங்கையில் ஏற்படுத்தப்படுகின்ற எந்தப் பேச்சுகளும் நன்மை தர போவதில்லை என்று கூறிய பக்ஷீர் அவர்கள் தனது பேச்சினை முடித்தார்.

பக்ஷீர் அவர்களுடைய உரையை தொடர்ந்து கருத்து தெரிவித்த டொக்டர் பாலா அவர்கள் தமிழீழ மக்கள் சிங்கள பேரினவாதத்திற்கெதிராக ஒன்றுபட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார். சிங்கள பேரினவாதத்தின் ஒரு சதி முயற்சியாகவே இன்று வடகிழக்கு பிரிப்பு நடைபெறுகின்றது எனவும் இந்த சூழ்ச்சிக்கு தமிழ் முஸ்லிம் மக்கள் பலியாகக்கூடாது என்றும் குறிப்பிட்டார்.

இதன்பின்பு அரசியல் மேடைகளில் அதிகம் கேட்கமுடியாத மிக வித்தியாசமான ஒரு விடயம் பற்றிய உரையாடலுக்கு அரங்கு தயாரானது.

பேச்சுவார்த்தைகளிலோ, தீர்வுகளிலோ, சமாதானத்திற்கான கருத்தரங்குகளிலோ எத்தனையோ விடயங்கள் பேசப்படும். ஆனால் பெண்ணிலை நோக்கிலிருந்து தீர்வுகளை, முடிவுகளை அணுக வேண்டியதன் அவசியம் பற்றி யாரும் அலட்டிக்கொள்வதில்லை. இந்த மாநாட்டு நிகழ்ச்சிநிரலில் கூட இந்த பெண்கள் சார்ந்த தலைப்பு போடப்பட்டிருக்கவில்லை. ஆனாலும் இறுதிநேரத்தில் அப்படி ஒரு தலைப்பு ஒதுக்கப்பட்டு விஜி எனும் ஒரு பெண் உரையாற்றினார்.

இந்த மாநாடும் கூட பெண்களின் பார்வைகளினூடான அரசியல் தீர்வை அணுகுவதற்கான வாய்ப்புகளை வழங்க தவறி இருந்தமையை சுட்டிகாட்டிய அவர் யுத்தகால அனர்த்தங்களின் பின்னாலுள்ள பெண்களின் பாதிப்புகளை விபரித்தார். ஏற்கனவே நமது சமூகமானது பெண்களின் மீது ஒடுக்குமுறை செலுத்துகின்ற ஆணாதிக்க சமூகம் என்று பகிரங்கமாகவே குற்றம் சாட்டி அத்தோடு சேர்த்து யுத்த சூழல் பெண்கள் மீது இரட்டிப்பு ஒடுக்குமுறைக்கு வழிவகுக்கிறது என்றார்.

போருக்குள் இழுத்துவிடப்படுகின்ற சிறுமிகள், விதவைகளாக்கப்படுகின்ற பெண்கள், மனநோயாளிகளாக்கப்பட்ட பெண்கள், பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படும் பெண்கள் என்பவை பற்றிய சில புள்ளிவிபரங்களை கிழக்கு மாகாணத்தை உதாரணமாக கொண்டு விப்ரித்து பேசினார். மேலும் இந்த மாநாட்டின் ஊடாக எடுக்கப்படுகின்ற அரசியல் தீர்வு பற்றிய தீர்மானங்களில் பலமுனைகளிலும் நிர்கதியாக்கப்படும் பெண்களின் மறுவாழ்வு திட்டங்கள், புனருத்தாரணங்கள், இழப்பீடுகள், போன்றவற்றை நடைமுறைபடுத்தும் வண்ணம் அரசியல் உத்தரவாதங்களை உள்ளடக்க வேண்டும் என கேட்டு தனதுரையை முடித்தார். இந்த விஜி எனும் பெண் இலக்கிய அரசியல் சஞ்சிகை ஒன்றின் ஆசிரியராயும், புகலிட நாடுகளில் நடைபெற்றுவரும் பெண்கள் சந்திப்பு எனும் தொடர் அமர்வுகளின் செயற்பாட்டாளர்களில் ஒருவராகவும் இயங்கிவருபவர் என்பது தமிழலை வாசகர்களுக்காக அவர் பற்றி நான் அறிந்து கொண்ட மேலதிக தகவல்கள் ஆகும்.

இவரது உரையின் பின்னர் பலர் அக்கருத்துக்களின் முக்கியத்துவத்தை ஏற்றுகொள்ள வேண்டியுள்ளது என பொருள்பட கருத்து சொன்னார்கள். ஒருசிலர் இது பெண்களின் பிரச்சனை அரசியல் மேடைகளில் அவசியமற்றது என்றவறாகவும் பெண்விடுதலைபற்றி பேசுவது ஆண்களை திட்டிதீர்க்கவே என்ற குற்றசாட்டுகளையும் தமது கருத்துக்களாக முன்வைத்தனர்.

தொடரும்......

**சேர்.பொன்.பொன்னம்பலம் காலத்தில் உருவாகிய இந்த தமிழ் மேலாதிக்க மனோநிலை இன்ற மூதூரில் வந்து நிற்பதை வரலாற்று தொடர்ச்சிகளினூடு அவர் அவையிலிருந்தோர்க்கு புரியவைத்தமை மிக சிறப்பாயிருந்தது.**

# எம் இளைஞர்களைக் கொன்று எம் மக்களையும் அழிக்க முனையும் பிரபா குழுவினரை எம் மண்ணிலிருந்து துடைத்தெறிவோம்.

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கை

அன்பார்ந்த எம் சகோதரர்களுக்கு,

மட்டக்களப்பு கிரான் பகுதியைச் சேர்ந்த அப்பாவிகளான ஒன்றுமறியாத எம் மண்ணைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக மூன்று இளைஞர்கள் பிரபா குழுவினரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர். எம்மண்ணில் பிரபா குழுவினரால் சிந்தச் செய்யப்பட்டுள்ள இவ்விளைஞர்களின் இரத்தமும், உயிர்களும் தான் இறுதியானதாக இருக்க வேண்டும். எம் இளைஞர்களினதும், சிறுவர்களினதும், பெண்களினதும், தாய்மார்களினதும் இரத்தமும், உயிரும் இனிமேல் எக்காரணம் கொண்டும் அநியாயமாக அந்நியர்களால் பறிக்கப்படுவதை நாம் இனியும் அனுமதிக்கக் கூடாது. எம்மக்கள் மீது பிரபா குழுக் காடையர்கள் கட்டவிழ்த்து விட்டுள்ள படுகொலைகளுக்கும், தாக்குதல்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதுவே எம்மண்ணில் பிரபா குழுவுக்கான முடிவுப்புள்ளியாகவும், இறுதி அத்தியாயமாகவும் இருக்க வேண்டும்.

இம்மண்ணிற்கும் மக்களுக்கும் பிரபாகுழுவினர் இழைத்துள்ள கொடுமைகளையும், கொடூரங்களையும் ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். அவர்களினால் அநியாயமாக பறிக்கப்பட்டுள்ள, பலி கொடுக்கப்பட்டுள்ள எம் இளைஞர்களினதும், சிறுவர்களினதும், மாணவர்களினதும் உயிர்களையும், அவர்களினது கடைசி நேர கதறல்களையும் சிந்தித்துப்பாருங்கள். எம் மண்ணின் ஸ்திரத் தன்மை, எம் மக்களின் இயல்பு வாழ்க்கை, சிறார்களின் கல்வி, இளைஞர்களின் எதிர்காலம் போன்றவற்றை பிரபா குழுவின் அடக்குமுறைக்காக நாம் செலுத்தி வந்த விலைகள் இனியும் நாம் பெறுமதிமிக்க உயிர்களையும், இளைஞர்களின் வளமான எதிர்காலத்தையும் யாருக்காகவும் தாரைவார்க்க முடியாது.

எம் தாய் மண்ணையும், மக்களையும் பாதுகாத்து அவர்களுக்கு நிம்மதியான வாழ்வைப் பரிசளிக்க வேண்டுமென்பதற்காக அதற்குப் பெரும் தடையாக இருந்து வரும் வன்னி காடையர்களை எம்மண்ணை விட்டு வெளியேறுமாறும், அவர்களுக்கான உதவிகளை நிறுத்திக் கொள்ளுமாறும் பல தடவைகள் பல வழிகளில் கோரிக்கை விடுத்து வந்துள்ளோம். அவைகள் நிராகரிக்கப்பட்டு தொடர்ந்தும் எம்மக்கள் மீதான பிரபா குழுவின் கொலை வெறியும், அடக்குமுறையும் அதிகரிக்க எமது பலப் பிரயோகத்தின் மூலம் எம் மண்ணை தூய்மைப்படுத்துவதைத் தவிர வேறுவழி எமக்கு இருக்கவில்லை. இதனால் தான் எமது பிரபா குழுவினருக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை நாம் தீவிரப்படுத்தினோம். எம்மை இராணுவ ரீதியாக எதிர்க்க முடியாமல் கோழைத்தனமாக எம்மக்களை படுகொலை செய்வதன் மூலம் கிழக்கு மண்ணில் ஸ்திரமற்ற நிலையைத் தோற்றுவிக்க வன்னியின் உத்தரவின்படி படுகொலைகளை மீண்டும் கட்டவிழ்த்து விட்டு வருகின்றனர்.

எம்மண்ணின் பெறுமதிமிக்க உயிர்கள் இனிமேல் எக்காரணம் கொண்டும் பிரபா குழுவினரால் பறிக்கப் படுவதை நாம் அனுமதிக்கக் கூடாது. எம்மண்ணையும், மக்களையும் பாதுகாத்து எம் சிறார்களின் வளமான எதிர்காலத்திற்காகவும் எம்மண்ணை தூய்மைப்படுத்துவதற்கும் இப்புனிதப் போராட்டத்தில் எம்முடன் இணையுமாறு மீண்டும் அழைக்கின்றோம். வன்னிக் கும்பலுடன் உங்களின் பிள்ளைகள், உறவினர்கள் யாராவது இருந்தால் அவர்களை உடனடியாக மீட்டெடுங்கள். பிரபா குழுவினருக்கு தெரிந்தோ, தெரியாமலோ உதவிகள், ஒத்தாசைகள் புரிவதன் மூலம் எம் மண்ணின் வரலாற்றுக் குற்றவாளிகளாக் ஆகிவிட வேண்டாம் என உரியவர்களை அன்பாக வேண்டுகின்றோம்.

கிரானில் இடம் பெற்ற படுகொலையே பிரபாகுழுவினரால் மேற்கொள்ளப்பட்ட கடைசிப் படுகொலையாகவும், அழிக்கப்பட்ட இறுதி கிழக்கு மண்ணின் உயிர்களாகவும் இருக்க வேண்டும். இதற்காக நாமனைவரும் ஒன்றிணைவோம்.

எம் இளைஞர்களே,

நீங்களும் நன்றாக சிந்தித்துத் தீர்க்கமான முடிவெடுக்க வேண்டிய கட்டத்தில் உள்ளீர்கள். அநியாயமாக உங்கள் உயிர்கள் பிரபா குழுவினரால் பறிக்கப்பட்டு வரும் நிலையில் எம் மக்களையும், மண்ணையும் காக்க எம்முடன் இணைந்து கொள்ளுங்கள். நீங்கள் ஒதுங்கி ஒதுங்கிப் போக அவர்கள் விரட்டிக் கொண்டே இருப்பார்கள் நாம் எதிர்த்து நின்றால் தான் தன்மானத்துடன் தம் உரிமைகளுடன் வாழ முடியும். அதற்காக எம்முடன் இணைந்து கொள்ளுமாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறோம்.

**நன்றி**

**தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்.**

# தோற்றுப்போன தனி ஈழக் கொள்கை

தொடர் -12



**வள்ளுவன்**

**பிரேமதாச அரசைப் பயன்படுத்தி இந்திய அமைதிப் படையினரை நாட்டை விட்டு வெளியேற்றியதாக புலிகள் பெருமைப்பட்டாலும், பிரேமதாசவின் ராஜதந்திர வலைக்குள் பிரபாகரன் சிக்கிக் கொண்டதை உடனடியாக யாரும் உணரவில்லை.**

இந்திய மத்திய அரசாங்கத்தில் ஏற்பட்ட மாற்றம் இலங்கையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. வி.பி. சிங் தலைமையிலான மத்திய அரசு இலங்கையிலிருந்து இந்திய அமைதி காக்கும் படையை திரும்பப் பெறுவது என்பதில் உறுதியாக இருந்து அதற்கான சகல அட்டவனையும் தயார்படுத்தப் பட்டு இந்திய அமைதிகாக்கும் படையினர் திருமலை துறைமுகத்தினூடாக கட்டம் கட்டமாக வெளியேறினர். இந்திய அமைதிகாக்கும் படையினர் இலங்கையை விட்டு வெளியேறுவது இந்தியாவின் பிராந்திய நலனுக்கு ஆபத்தாக அமையும் என இந்திய உயர் அதிகாரிகள் மத்திய அரசுக்கு கூறிய போதும் அது கவனத்தில் கொள்ளப்படவில்லை. இந்நிலையில் வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் இந்தியா சென்று பிரதமர் உட்பட உயர்மட்டத்தினைச் சந்தித்து இலங்கை அரசின் கபட நாடகத்தில் சிக்க வேண்டாம் என கோரிக்கை விடுத்தும் அது நிராகரிக்கப்பட்டது. இந்திய அமைதிகாக்கும் படையினர் வெளியேற்றமும் நிச்சயமானது.

இந்திய அமைதிப் படையின் வெளி யேற்றத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டது ஈ.பி.ஆர்.எல்.எப். தான். இந்திய அமைதிக்ப்படை வெளியேறினால் அவர்களால் தாக்குப் பிடிக்க முடியாது என்பதை நன்குணர்ந்து கொண்டதனால் இந்தியத் துருப்பின் கடைசிச் சிப்பாயும் வெளியேறுமுன் வட-கிழக்கை தனி ஈழமாகப் பிரகடனம் செய்து விட்டு இந்திய அமைதிப் படையுடன் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர்களும், போராளிகளும் வெளியேறியதும் மாகாண சபையும் செயலிழந்தது.

இலங்கையை விட்டு இந்தியப் படை வெளியேறி தமிழ் நாட்டின் கரையை அடைந்த போது அவர்களை வரவேற்க தமிழக அரசின் சார்பில் யாரும் சென்றிருக்கவில்லை. மு. கருணாநிதியின் திராவிட முன்னேற்றக் கழகமே அன்று ஆட்சியில் இருந்தது. இந்தியப் படையினரை வரவேற்கச் செல்லாதது குறித்து கருணாநிதி பின்வருமாறு கூறினார். எமது நாட்டு கிரிக்கெட் அணி வெளிநாடு சென்று தோற்று விட்டு வந்தால் அதனை வரவேற்க அரசியல் தலைவர்கள் செல்வார்களா? அது போலத்தான் இதுவும் இந்திய அமைதிகாக்கும் படையானது இந்தியாவின் பிராந்திய நலனுக்காக இலங்கைக்கு சென்றது எனவும் அதனால்தான் இழப்புக்களைச் சந்தித்தது எனவும் எனவே தமிழக முதல்வர் கருணாநிதி இந்திய அமைதிப்படையையும், இந்தியாவையும் அவமதித்து விட்டார் என இந்திய அரசியல் தலைவர்கள் கூறினர். இலங்கையில் இந்திய இராணுவம் அதிகாரிகள் உட்பட 1115 சிப்பாய்களை இழந்தது. இன்னும் பலர் அங்கவீனமாகினர். 1971 ஆம் ஆண்டு பங்காளதேஷ் என்ற தனிநாட்டை உருவாக்குவதற்காக பாகிஸ்தானுடன் இடம் பெற்ற யுத்தத்தில் இந்திய இராணுவம் 1047 சிப்பாய்களையே இழந்திருந்தது.

புலிகள் இயக்கத்துக்கு அன்று பெரும் ஆதரவும், உதவியும் வழங்கி வந்த கருணாநிதியின் தமிழக அரசு இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையின் தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமித்த ஆக்கிரமிப்புப் படை என்று கூறியது. இதற்கேற்றாற் போலவே புலிகள் தமிழ் நாட்டில் இந்தியப் படையினருக்கு எதிரான பிரச்சாரங்களை உணர்வு பூர்வமாக மேற்கொண்டு வந்தனர். தமிழர்களை கொலை செய்த கொலைகாரப் படை என புலிகள் சார்பாக இந்திய ஊடகங்கள் பகிரங்கமாகவே எழுதின. இந்தியப் படையினருக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களும், புத்தகங்களும் வெளியிடப்பட்டன. சாத்தானின் படை எனவும், ராஜீவ் காந்தியை கொலைப்பிரியராகவும் சித்தரித்து புத்தகங்கள் தமிழ் நாட்டில் விற்பனைக்கே விடப்பட்டன. தமிழக மக்கள் அன்று புலிகள் சார்பான போக்கையே கொண்டிருந்தார்கள் என்றால் அது மிகையல்ல.

இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு முற்றாக வெளியேறி ஒரு வார காலத்திற்குள் வட-கிழக்கை புலிகள் இயக்கம் தமது பூரண கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது. இதற்கு பிரேமதாச அரசாங்கமும் மறைமுக ஆசி வழங்கியது. இலங்கை அரச படையினர் முகாம்களுக்குள் முடங்க நிர்வாகம் உட்பட அனைத்தும் புலிகளின் வசமானது. வட-கிழக்கு 1981 ஆம் ஆண்டின் பழைய நிலைக்கு மீண்டும் சென்றது. தமிழ் நாட்டில் இருந்து புலிகளுக்கு தேவையான ஆயுதங்களும், நிதி உதவிகளும் தாராளமாகவே வரத் தொடங்கின. தமிழ் நாட்டின் பல அரசியல் கட்சிகளும் புலிகளுக்கு தம் பூரண ஆதரவை வழங்கினர். இவைகளைப் பயன்படுத்திக் கொண்ட புலிகள் மீண்டும் ஒரு பாரிய யுத்தத்திற்கு தம்மை தயார்படுத்திக் கொண்டனர்.

1989 ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்திற்கும், பிரேமதாச அரசுக்குமிடையே ஆரம்பமான பேச்சுவார்த்தையில் புலிகள் தமக்குத் தேவையானதை பெற்றுக் கொண்ட பின் பேச்சுவார்த்தையை குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். 1990 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இப்பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பிதம் அடைந்தன. இந்நிலையில் யாழ்ப்பாணம் சென்று புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திவிட்டு திரும்பும் வழியில் ஏ.சி.எஸ். ஹமீத் பயணம் செய்யவிருந்த விமானத்தையும், பலாலி விமானத் தளத்தையும் இலக்கு வைத்து புலிகள் எறிகணைத் தாக்குதல் நடாத்தினர். புலிகளுக்கும், பிரேமதாச அரசுக்குமிடையேயான பேச்சுவார்த்தையை எதிர்த்த எதிர்கட்சிகள் இதனை சரியான வாய்ப்பாகப் பயன்படுத்தி கடும் விமர்சனங்களை வைத்தனர். கிழக்கில் பொலிஸ் நிலையங்கள், அரச தாபனங்கள் என்பன புலிகளினால் கடுமையாகத் தாக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பிரேமதாச அரசும் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை பிரகடனம் செய்து தாக்குதல்களை ஆரம்பித்தது.

1989 ஆம் ஆண்டு பிரேமதாச அரசுக்கும், புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம் வரவேற்றுப் பேசினார். ஆனால் அப்பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து மீண்டும் யுத்தம் ஆரம்பித்தால் தமிழ் மக்கள் கடும் கஷ்டங்களை எதிர் நோக்க வேண்டியிருக்கும் எனவும் தீர்க்க தரிசனமாகக் கூறினார். புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் பிரேமதாச அரசின் செயற்பாட்டை நாம் வரவேற்கின்றோம். இத்தகைய பேச்சுவார்த்தைகள் மூலம் ஏற்கனவே ஜனநாயக வழிக்கு வந்தவர்களை மீண்டும் காடுகளுக்கு அனுப்பக் கூடாது. சகல தரப்பினரும் இப்பேச்சுவார்த்தையில் உள்ளடக்கப்பட வேண்டும். இந்தியாவையும் சேர்க்க வேண்டும். தற்போதைய நிலைமைகளைப் பயன்படுத்தி அரசியல் லாபம் தேட யாரும் முனையக் கூடாது. இப்பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து மீண்டும் யுத்தம் ஆரம்பித்தால் தமிழ் மக்கள் தான் பெரும் இன்னலடைவர் என்றார் அமிர்தலிங்கம்.

பிரேமதாச அரசைப் பயன்படுத்தி இந்திய அமைதிப் படையினரை நாட்டை விட்டு வெளியேற்றியதாக புலிகள் பெருமைப்பட்டாலும், பிரேமதாசவின் ராஜதந்திர வலைக்குள் பிரபாகரன் சிக்கிக் கொண்டதை உடனடியாக யாரும் உணரவில்லை. இந்தியப் படையை புலிகள் மூலமே வெளியேற்றிவிட்டு தமிழ் மக்களுக்கு ஒரு அரைகுறைத் தீர்வை முன் வைத்தால் அதனை ஏற்காமல் அவர்கள் போராடினால் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துகிறோம் என்ற போர்வையில் தாக்குதல்களையும், வன்முறைகளையும் கட்டவிழ்த்து விடலாம் என்பதே அவரின் திட்டமாக இருக்கலாம். அது போலத்தான் நடந்தது. பிரேமதாச அரசுடனான மோதல் வெடிக்கவே அரச படைகள் தமிழ் மக்கள் மீது பாரியளவிலான தாக்குதல்களையும், படு கொலைகளையும் மேற்கொண்டன. தமிழ் மக்களின் அவல அழுகுரல்களை இந்தியா இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என்று மௌனமாக இருந்தது. ஆக பிரேமதாசவின் அரசியல் ராஜதந்திரத்தில் பிரபாகரன் சிக்கிக் கொண்டார் எனலாம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பயன்படுத்தி சிங்களத் தலைவர்களும், புலிகளும் அரசியல் விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றார்கள் என்பதே அமிர்தலிங்கத்தின் வருத்தமாக இருந்தது மட்டுமன்றி தமிழ் மக்களுக்கெதிராக இவ் அரசாங்கம் தாக்குதல்களை மேற் கொண்டால் உதவிக்கு இந்தியா வராது என்பதே அவரின் கவலையாக இருந்தது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசியல் லாபங்களுக்கு அப்பால் பார்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி தலைவர்களை நேரில் கண்டு கோரிக்கை விடுத்தார். ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் இணைந்து தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை வைக்காத வரை பிரச்சினை தீரப் போவதில்லை என் அமிர்தலிங்கம் வலியுறுத்தி வந்தார்.

புலிகளுக்கும், பிரேமதாச அரசுக்குமிடையிலான பேச்சுவார்த்தை முறிவடைந்ததை தொடர்ந்து பாராளுமன்ற கமிட்டியினூடாக இனப் பிரச்சினைத் தீர்வு யோசனையை முன் னெடுக்கும் முயற்சிகளும் தடைப்பட்டன. புலிகளுக்கு இனப்பிரச்சினைத் தீர்ப்பதற்கு அரசியல் ரீதியான நடவடிக்கையில் நாட்டம் இல்லையென்பதையும், வன்செயல்கள், தாக்குதல்கள் ஊடாக இனப்பிரச்சினைத் தீர்வை அடைய முடியும் எனவும் புலிகள் நம்பினர். அதற்காகவே அனைத்து விதமான அரசியல் நடவடிக்கைகளையும் நிராகரித்து விட்டு அனைத்து அரசாங்கங்களுடனும் மோதல்களைக் கடைப்பிடித்தனர்.

இவ்வேளையில் பிரேமதாச அரசாங்கத்திற்கு உள் நெருக்கடிகள் ஏற்பட ஆரம்பித்தன. லலித் அத்துலத் முதலி, காமினி திஸாநாயக்க போன்றோர். அரசாங்கத்துடன் அதிருப்திப்பட்டு கட்சியில் இருந்து வெளியேறி புதிய கட்சியைத் தொடங்கினர். பாராளுமன்றத்தில் ஜனாதிபதி பிரேமதாசவிற்கு எதிராக குற்றப் பிரேரணையும் கொண்டுவரப் பட்டது. ஆனாலும் இவற்றையெல்லாம் புத்திசாலித்தனமாகவும், தந்திரோபாயமாகவும் பிரேமதாச முறியடித்தார். தமது அரசியல் எதிரிகளில் பணத்தாலும், பதவியாலும் வாங்கக் கூடியவர்களை வாங்கிக் கொண்டும் மற்றவர்களை தீர்துக் கட்டவும் ஆரம்பித்தார்.

இதேவேளை வட-கிழக்குப் பகுதியில் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையே திடீர் மோதல்கள் இடம் பெற்றன. புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை மீட்கும் நடவடிக்கையில் பல இராணுவ நடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட்டன. தமிழ் மக்கள் வகை தொகையின்றி கொல்லப்பட்டனர். அன்று இந்தியாவின் மத்திய அரசாங்கத்தை கொண்ட வி.பி.சிங் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டது தவறானது எனவும் ராஜீவ் காந்தியும், ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் செய்துகொண்ட இந்திய- இலங்கை ஒப்பந்தம் இரு நாடுகளுக்குமிடையே மனக் கசப்பையே தோற்றுவித்திருப்பதாயும் இந்திய மத்திய அரசு கூறியது.

இந்தியாவின் மத்திய அரசாங்கத்தின் தலையிடாக் கொள்கைக்கு உலக நாடுகளும், இலங்கையும் வரவேற்ற போதும் இதனைப் பயன்படுத்தி புலிகள் தமிழ் நாட்டில் தமது எதிரிகளை இலக்கு வைத்தனர். 1990 ஆம் ஆண்டு ஜூலைமாதம் 13 ஆம் திகதி சென்னையிலிருந்த கோடம்பாக்கம் அலுவல கத்தில் வைத்து ஈ.பி.ஆர்.எல்.எப். இன் மத்திய குழுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் புலிகள் அவர்களை தாக்க பத்மநாபா உட்பட ஈ.பி.ஆர்.எல்.எப். இன் 13 முக்கிய உறுப்பினர்கள் அதில் கொல்லப்பட்டனர். பத்மநாபாவுடன் சேர்ந்து யோகசங்கரி எம்.பி, தருமன், பாட்டுரவி, புவிநாதன், லிங்கன், ரவி, அன்பு முகுந்தன், மோகனராஜா, கமலன் என்ற மிஹ்லார், கவிதா, பிரிந்தா, கிருபாகரன் ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர். இவர்களில் மிஹ்லார் என்பவர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்த போதும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்தவர். இவர் கிழக்கு மாகாணத்தின் கல்முனையில் மருதமுனை எனும் கிராமத்தைச் சேர்ந்தவர். தமிழ்-முஸ்லிம் சகோதரத்துவ உறவுக்காக இவர் பெரும் பங்காற்றியதாக பின்னாளில் வரதராஜப் பெருமாள் குறிப்பிட்டார்.

சென்னையில் பட்டப்பகலில் புலிகளால் இப்படு கொலை மேற்கொள்ளப்பட்ட சமயம் தமிழ் நாட்டில் கருணாநிதியின் அரசே ஆட்சியில் இருந்தது. புலிகளுக்கு கருணாநிதி அரசு பெரும் ஆதரவு வழங்கி வந்த சமயம் அது. இந்நிலையைல் இக் கொலைகளில் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள் என்று தெரிய வந்தால் தமது ஆட்சிக்குப் பிரச்சினையாக வரும் என்பதினால்......

(தொடரும்)

## இராணுவத்தை மேலும் செயற்திறனாக மாற்ற உள்ளக மாற்றம் செய்யப்படுகின்றது.



இராணுவ தலைமைப் பதவியில் விரைவில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளது. மலர்ந்திருக்கும் புது வருடத்தில் இராணுவ தலைமைப் பதவியில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகப் பாதுகாப்புத் தரப்புத் தெரிவித்துள்ளது. பதவி வெற்றிடங்கள் மற்றும் புதிய இராணுவப் பிரிவுகளுக்கு இராணுவ அதிகாரிகளை நியமிக்கவுள்ளதால் இராணுவத் தலைமைப் பதவிகளில் இந்நியமனங்கள் செய்யப்படவுள்ளன. இதேவேளை இராணுவத் தலைமை அதிகாரி ஓய்வு பெறவுள்ளதால், அவர் பதவி வகித்த தரைப்படைப் பிரிவுப் பொறுப்புகள் மாற்றம் செய்யப்படவுள்ளன. அதேசமயம், இராணுவ புலனாய்வுப் பிரிவிற்குப் பொறுப்பாக கேணல் அமில கருணாநாயக்க நியமிக்கப்படவுள்ளார்.

கிழக்கில் கடமையாற்றும் இராணுவக் கட்டளை அதிகாரிகள் மூவர் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டு, புதிய பொறுப்புகளும் வழங்கப்படவுள்ளன. இவ்வாறான பதவி மாற்றங்கள், இடமாற்றங்கள் காரணமாக இராணுவத் தலைமையில் இன்னும் பல மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழ் மக்களுக்கு தடுக்கப்பட்ட தீர்வுகள் திம்பு தொடக்கம் இன்றுவரை.

## வரலாற்றுத் தொடர்...~13

புலவன்




வெளிவிவகார அமைச்சர் ஹமீத்திற்கும், யோகரத்தினம் யோகிக்கும் இடையே தொலைபேசி மூலமாக இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் போது சுமூக நிலை ஏற்பட்டு மக்கள் நல்லெண்ணம் கொள்ளும் வகையில் இலங்கை அரசாங்கம் யாழ் குடா நாட்டுக்கு உணவுப்பொருட்களை அனுப்பி வைக்க வேண்டும் எனவும், அதுவும் அரசாங்கத்தின் சுயவிருப்பத்தில் அனுப்புவதாக இருக்க வேண்டுமெனவும் புலிகள் சார்பாக யோகி கூறினார். இதன் விளைவாக யாழ் குடா நாட்டுக்கு தேவையான உணவுப் பொருட்களை அனுப்ப அரசாங்கம் ஏற்பாடுகளை மேற்கொண்டது. இவ்வேற்பாடுகள் நடை பெற்றிருக்கும் போதே மறுமுனையில் ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை ராஜினமாச் செய்ய வேண்டும் எனவும் புலிகள் வற்புறுத்தினர். இதன் முதற்படியாக ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினரானவர் பரராஜசிங்கம் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினமாச் செய்வதாக பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்பினார். இதனையடுத்து 1990 ஜூலை 2ஆம் திகதியன்று அனைத்து ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது பதவிகளை ராஜினமாச் செய்தனர்.

ஈரோஸ் பாரர்ளுமன்ற உறுப்பினர்கள் தன்னிச்சையாக தமது பதவிகளை ராஜினமாச் செய்யவில்லை எனவும், புலிகளின் அச்சுறுத்தலினாலேயே பதவிகளை ராஜினமாச் செய்வதாகவும் கூறப்பட்டது. 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியப் படையினர் வடக்கு கிழக்கில் இருந்து முற்றாக வெளியேறிவிட்டதுடன் வட~கிழக்கு முழுவதிலுமுள்ள ஈரோஸ் முகாம்கள் புலிகளினால் சுற்றிவளைக்கப் பட்டு ஆயுதக் களைவு மேற்கொள்ளப் பட்டது. யாழ்பாணத்தில் ஈரோஸ் இயக்க உறுப்பினர் களிடமிருந்த ஆயுதங்கள் பகிரங்கமாக பறிக்கப்பட்டன. ஆனால் ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்கென தனியான மெய்ப்பாதுகாப்புப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி பாதுகாப்பளிப்பதாக அன்றைய பாதுகாப் பமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன உறுதியளித்தார். ஆனால் யாழ்பாணத்தில் இருந்த ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனை புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக விரும்பவில்லை. கொழும்பிலிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனை வரவேற்றனர். இதனால் ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடு தோன்றியது.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இராணுவத்தினருக்கும், புலிகளுக்குமிடையே மோதல்கள் உக்கிரமடைந்த நேரம் ஈரோஸின் கொழும்பு அலுவலகத்தில் இருந்த தொலைத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தையை மேற்கொண்டு வந்தது. இத்தருணத்தில் யாழ் குடாநாட்டில் இருந்த படையினருக்கு நீர், உணவு, மருந்துப் பொருட்கள் போன்றன உலங்கு வானூர்தியின் மூலமாகவே அனுப்பி வைக்கப்பட்டு வந்தன. யாழ் கோட்டையில் இருந்து படையினரை வெளியேற்றுவது தொடர்பாக அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தியது. எனினும் படையினர் நிராயுதபாணியாகவே வெளிச் செல்ல அனுமதிக்கப் படுவர் என புலிகள் கூறினர். இதனால் அப்பேச்சுவார்த்தை ஸ்தம்பிதம் அடைந்தது. இதனைத் தொடர்ந்து புலிகள் ஈரோஸின் தலைமை அலுவலகத்தை சுற்றிவளைத்து ஆவணக் காப்பகம், ஆயுதங்களையும் கைப்பற்றினர். இந்நிலையில் ஜூன் 20 ஆம் திகதி ஈரோஸின் பொதுச்செயலாளரான பாலகுமாரன் யாழ் கோண்டாவிலில் இருந்த புலிகளின் அரசியல் துறை அலுவலகத்தில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தையும், யோகியையும் சந்தித்துப் பேசினார்.

அப்போது பாலசிங்கம் அவரிடம் நாங்கள் இலங்கை அரசாங்கத்தை எதிரிகளாக நினைத்து போர்ப் பிரகடனம் செய்து விட்டோம். எங்களின் நண்பர்கள் யாரும் இலங்கை அரசாங்கத்தில் இருப்பதை நாங்கள் விரும்பவில்லை என்று கூறினார். இதனால் வேறுவழியின்றி ஜூலை 23ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலை படுகொலையை நினைவு கூரும் முகமாக ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமது பதவிகளை இராஜினமாச் செய்தனர். கொழும்பில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமது பதவிகளை ராஜினமாச் செய்து விட்டு யாழ் குடாநாட்டுக்கான உணவுப் பொருட்களுடன் வரும் கப்பலில் யாழ்ப்பாணம் வருமாறும் பாலகுமாரன் அறிவித்தார்.

கொழும்பில் இருந்த ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்களில் எட்வேர்ட் செபாஸ்தியாம் பிள்ளை, செல்வநாயகம் ஆகிய இருவர் மட்டுமே யாழ் குடா நாட்டுக்கு திரும்ப தயாராயினர். மலையகத்தைச் சேர்ந்த ராமலிங்கம் கொழும்பில் தங்கியிருந்த ஏனைய ஈரோஸ் பாராளுமன்ற உறுபினர்கள் பாலகுமாரனின் அறிவிப்பை நிராகரித்து விட்டு ஐரோப்பிய நாடுகளுக்கு பயணமாயினர். யாழ்ப்பாணம் வர ஆயத்தமான ஈரோஸ் உறுப்பினர்கள் இருவரும் யாழ்குடா நாட்டுக்கான உணவுப் பொருட்களுடன் பயணிக்கும் கப்பலில் பயணமாகினர். கொழும்பு துறைமுகத்தில் இருந்து குறித்த கப்பல் புறப்பட்ட போது அது யாழ்பாணத்தில் எந்த துறைமுகத்தில் தரிப்பது என்ற சர்ச்சை ஏற்பட்டது. கப்பல் காங்கேசன்துறைக்கே செல்லும் என அரசாங்கம் அறிவித்தது. ஆனால் காங்கேசந்துறையில் உணவுப் பொருட்களை இறக்கினால் அதனை மக்களுக்கு சுயாதீனமாக பங்கீடு செய்ய முடியாது என்பதை காரணம் காட்டி பருத்தித் துறைமுகத்திற்குச் கப்பல் வரவேண்டும் எனவும் புலிகள் வற்புறுத்தினர். உண்மையிலேயே புலிகள் கப்பல் பருத்தித் துறைக்கு வரவேண்டும் என்று வற்புறுத்தியதன் நோக்கம் காங்கேசந்துறை துறைமுகம் படையினரின் கட்டுப்பாட்டிலும், பருத்தித் துறை துறைமுகம் புலிகளின் கட்டுப்பாட்டிலும் இருந்ததே ஆகும்.

இச் சர்ச்சை காரணமாக கப்பலின் பயணத் தொடர்வதில் சிரமங்கள் ஏற்பட்டன. இறுதியாக பருத்தித் துறை துறைமுகத்துக்கு உணவுப் பொருட்களை அனுப்பினால் யாழ் கோட்டை மீதான புலிகளின் முற்றுகை தளரும் என்ற நப்பாசையில் இலங்கையரசாங்கம் பருத்தித் துறை துறைமுகத்துக்கு செல்லுமாறு கப்பலை பணித்தது. பருத்தித் துறை துறைமுகத்தில் கப்பலை கரைக்கு கொண்டு வரும் வழியில்லாததனால் கடலில் நங்கூரம் இட்டு நிற்க படகுகள் மூலம் புலிகளினால் உணவுப் பொருட்கள் இறக்கப்பட்டன. உணவுப் பொருட்கள் முழுவதும் இறக்கி முடிந்தவுடன் அவை பாதுகாப்பாக புலிகளின் முகாம்களுக்கு கொண்டுசெல்லப்பட்டன. இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்தது போல புலிகள் யாழ் கோட்டை மீதான முற்றுகைகளை தளர்த்தவில்லை.

உணவுப் பொருட்களுடனான கப்பல் பருத்தித் துறை துறைமுகத்தை அடையும் என புலிகள் உறுதிப்படுத்தியதுடன் ஈரோஸ் அலுவலகத்தில் புகுந்து பாலகுமாரன் பயன்படுத்திய தொலைத் தொடர்பு சாதனங்களையும் பறிமுதல் செய்தனர். இதனைத் தொடர்ந்து ஈரோஸ் அலுவலகத்தி னூடாக கொழும்பு அரசாங்கத்துக்கு இருந்த தொடர்பு முற்றிலுமாகத் துண்டிக் கப்பட்டது. ஏற்கனவே ஆயுதங்கள் அற்றிருந்த ஈரோஸ் இயக்கம் அனைத்தையும் இழந்து நிர்க்கதியானது. ஈரோஸ் ரகசிய ஆயுதக் கிடங்குகள் வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் சில முக்கியஸ்தர்கள் புலிகளினால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டனர். இவைபற்றி ஈரோஸ் தலைமைப் பீடத்தினால் புலிகளின் தலைமை பீடத்துக்கு அறிவிக்கப்பட்ட போதும் ஈரோஸ் மீதான

**தமக்கு தேவையானதை மட்டும் பெற்றுக் கொண்டு தமிழ் மக்களின் நலன்கள், உரிமைகளைப் பற்றி சிறிது கூடக் கவலைப் படாமல் சிறு சிறு அற்ப சாதகங்களுக்காக 2ஆம் கட்ட ஈழப் போரை ஆரம்பித்தார் பிரபாகரன். இதனால் தமிழ் மக்களின் இன்னல்களும், அழுகுரல்களும் இன்னும் அதிகமாகியது.**

நெருக்குதலில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. இதனைத் தொடர்ந்து ஈரோஸ் இயக்கத்தை கலைத்து விட்டு புலிகளுடன் இணைவது என்ற முடிவை 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஈரோஸின் பொது ஆணைக்குழு எடுத்தது.

பிரேமதாச அரசுடன் புலிகளுக்கு இருந்த நல்லுறவை பயன்படுத்தி தமிழ் மக்களுக்குள் தீர்வைப் பெற்றுக் கொள்ளக் கூடிய அதிக வாய்ப்புகள் பல புலிகளுக்கு கிட்டின. ஏனைய சிங்கள ஆட்சியாளர்களை விட புலிகள் மீது தனிப்பிடிப்புக் கொண்டவராக பிரேமதாச இருந்தார். ஆனால் புலிகள் அவரிடமிருந்து தமக்கு மட்டும் தேவையான ஆயுதங் களையும், நிதியுதவிகளையும் பெற்றுக் கொண்டனரே தவர தமிழ் மக்களுக்காக எதனையும் கேட்கவில்லை. புலிகள் மக்களிடம் கட்டாய வரி வசூலிப்பதாகவும் மக்களுக்கான உணவுப் பொருட்களை கொள்ளையடிப்பது குறித்தும் பாராளு மன்றத்தில் பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜய ரட்னவிடம் கேட்டபோது அவர் புலிகள் என்ன புல்லையா சாப்பிடுவார்கள் என நக்கலாகக் கேட்டார். இவ்வாறு புலிகள் மீது பெரும் அனுதாபம் கொண்டிருந்தவரிடமிருந்து தமக்கு தேவையானதை மட்டும் பெற்றுக் கொண்டு தமிழ் மக்களின் நலன்கள், உரிமைகளைப் பற்றி சிறிது கூடக் கவலைப் படாமல் சிறு சிறு அற்ப சாதகங்களுக்காக 2ஆம் கட்ட ஈழப் போரை ஆரம்பித்தார் பிரபாகரன். இதனால் தமிழ் மக்களின் இன்னல்களும், அழுகுரல்களும் இன்னும் அதிகமாகியது.

பிரேமதாச அரசுக்கும், புலிகளுக்கிடையே யுத்தம் மூள இலங்கை இராணுவம் தமிழ் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை மேற்கொண்டது. பச்சிளம் பாலகர்கள், இளம் பெண்கள், வயோதிபர்கள், சிறுவர்கள், இளைஞர்கள் என பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். புலிகள் தம்மை நம்ப வைத்து ஏமாற்றிய கோபத்தை அரசாங்கம் தமிழ் மக்கள் மீதே காட்டியது.

புலிகளுடனான யுத்தம் ஆரம்பமான போது புலிகளை ஒழித்துக் கட்டாமல் விடமாட்டேன் என ரஞ்சன் விஜயரட்ன சூழுரைத்தார். புலிகளுக்கு மாற்றீடாக ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தையும் அவர்களிடமிருந்து பிரிந்த ஈ.பி.டி.பி. இயக்கத்தையும் கொழும்புக்கு அழைத்துவந்து பேச்சுவார்த்தை மேற்கொண் டது பிரேமதாச அரசாங்கம்.

இந்நிலையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி பாதுகாப்பமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண புலிகளினால் படுகொலை செய்யப் பட்டார். அச்சமயம் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு கதையொன்று பரவலாக பரவ ஆரம்பித்தது. அதாவது,

பிரேமதாச அரசாங்கம் புலிகளுடன் யுத்தம் புரிந்தாலும் பிரேமதாச தனிப்பட்ட ரீதியில் புலிகளுடன் ரகசியமான முறையில் நட்புறவைப் பேணினார் என்றும் தனது தனிப்பட்ட, அரசியல் எதிரிகளை அழிப்பதற்கு அவர் புலிகளின் உதவியை நாடினாரென்றும், அதற்கு பிரதியுபகாரமாக கறுப்புச் சந்தையினூடாக புலிகளுக்குத் தேவையான ஆயுதங்கள், நிதியுதவிகள் அனுப்பப்பட்டன எனவும் கூறப்பட்டது. அரசியலில் தனக்கு மிகவும் நெருக்கமா கவிருந்து பின்னர் பதவியாசை காரணமாக தனக்கெதிராகச் சூழ்ச்சி செய்தார் என்பதற்காகவே ரஞ்சன் விஜயரட்ணவை புலிகள் மூலம் படுகொலை செய்தார் எனவும் அதுபோல இராணுவத்தில் நட்சத்திரத் தளபதியாகவிருந்த லெப். ஜெனரல் டென்சில் கொபேகடுவ சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஆட்சியைக் கைப்பற்றத் திட்டமிட்டார் என்பதற்காகவும் அவரையும் புலிகள் மூலம் பிரேமதாச செய்தார் எனவும் அன்று சிங்கள மக்கள் மத்தியில் பரவலாகக் கூறப்பட்டது. ஆனால் இக்கதைகளின் உண்மைத் தன்மையை நிருபிக்க முடியவில்லை. அதே சமயம் புலிகளைப் பொறுத்தவரை இதற்கான வாய்ப்புக்களும் நிராகரிக்க முடியாதது.

பின்னாளில் புலிகளுடன் நட்பாகவிருந்த, அவர்களை மிகவும் நம்பிய ஜனாதிபதி பிரேமதாசாவே புலிகளின் தற்கொலைத் தாக்குதலினால் கொல்லப்பட்டார். 1993ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆம் திகதி உலக தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மேதின ஊர்வலத்தில் ஜனாதிபதி பிரேமதாச கலந்து கொண்ட போது புலிகளின் தற்கொலைத் தாக்குதலினால் அவர் கொல்லப்பட்டார். தொழிலாளர் சார்ந்த மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட அவர்களுக்காகப் பெரும் பாடுபட்ட பிரேமதாச புலிகளின் தற்கொலைப் படைப்பிரிவைச் சேர்ந்த பாபு எனப்படும் குலவீரசிங்கம் வீரகுமார் எனும் நெல்லியடி இளைஞர் மூலமே கொல்லப்பட்டார். இவ்விளைஞர் பிரேமதாசவின் மிக நெருங்கிய சகாவான மொகிதீன் என்பவருடன் பழக்கமாகி அவர் மூலமாக பிரேமதாசவுடன் நட்புறவாகி இரண்டு வருடங்கள் காத்திருந்து வன்னியில் இருந்து வந்த உத்தரவுக்கமைய பிரேமதாசவை மனித வெடிகுண்டாக மாறி கொன்றார்.

(தொடரும்.....)

# சுதந்திரக் கிழக்கு நோக்கி...

பேராசிரியர் அறுகம்குட்டிப் போடியார் அவுஸ்திரேலியாவிலிருந்து (தொடர் 16)

வரலாற்றின் மனிதன் என்கின்ற அ.அமிர்தலிங்கம் அவர்களது பவளவிழா மலரில் இச்சம்பவம் குறித்து ஜனார்த்தனன் பின்வருமாறு விபரிக்கின்றார்.

□செய்தித்தாள்களில் நான் உரையாற்றுவேன் என அறிவிப்பு. காலை ஊர்வலத்தை தொடங்கிவைத்து பேசியபோதே என்னை கைது செய்ய பொலிசார் முயற்சிசெய்ய, அவரிடம் அமரர் நவரத்தினம் பேச்சுக்கொடுத்து இடைமறிக்க, தலைமறைவானேன். மாலை வீரசிங்கம் மண்டபத்தில் மக்கள் வெள்ளம் நிறைந்துவிட்டதால் வெளியே அமைக்கப்பட்ட திடீர் மேடையை அடைந்தேன். காவல்துறை உயர் அதிகாரி ஒருவர் உம்மைக் கைது செய்து கொழும்பு நாலாவது மாடிக்கு அழைத்துசெல்லும் உத்தரவிது. ஏனக்காட்ட பேசிவிட்டுத்தான் வருவேன், பேசாது இங்கிருந்து போக தமிழ் மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என நான் மறுக்க வேறுவளியின்றி கூட்டத்தைக் கலைத்து அங்கேயோர் ஜாலியன் வாலாபாக் நடத்த காவல்துறையினர் முடிவுசெய்தது அகன்றனர். அலையைக் கிழித்துவரும் கலம்போல் அமிர்வந்தார். கரகொலி விண்ணைப்பிளக்க கையில் இருந்த மாலையை எனக்கு அணிவிக்க அதை அவருக்கு நான் திரும்ப மாலையிட அந்த மணமேடை ~ பின்னர் 12 உயிர்களை தியாகவடிவில் காணும் அவலம் ஏற்பட்டது. (வரலாற்றில் மனிதன் ~ பக்:114)

இந்த வாக்குமூலங்கள் ஊடாக நாட்டின் சட்டத்தை காக்கும் கடமையில் ஈடுபட்ட பொலிசார்

ஆத்திரமூட்டப்பட்டு சிவகுமாரன், ஜனார்த்தனன் போன்றோரை கைதுசெய்யும் முயற்சியில் வர்ன்நோக்கி சுடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதனை அமிர்தலிங்கம் சகாப்தம் எனும் நூலை எழுதிய கதிர் பாலசுந்தரம் அவர்கள் பின்வருமாறு விபரிக்கின்றார்.

1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தமிழ் ஆராய்ச்சிமாநாடு நடந்தது. உலகமெங்கும் இருந்து அறிஞர்கள் வந்திருந்தனர். மக்கள் வெள்ளம் அலைபுரண்டது. யாரோ ஒரு இந்தியர் பேசப்பேவதாக பொய்க்கதை பரவியது. திடீரென வந்த பொலிசார் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசினர். குண்டாம்தடிகளால் மக்களை அடித்தனா. ரைபிள்களால் சுட்டனர். மின்சாரக் கம்பி அறுந்து விழுந்து 9 பேர் பலியாகினார்கள்.

நடந்த உண்மைகளை இதற்குமேல் இன்றைய பரம்பரை புரிந்துகொள்ள வேண்டும். இவையனைத்தும் தாம் எதிர்பார்த்ததை விட சிறப்பாக மகாநாடு நடந்ததாகவே தமிழர் விடுதலைக் கூட்டணி கணக்குப் போட்டிருக்க வேண்டும். ஏனெனில் 10~01~74 இல் நடந்த இந்த 9 பேரினுடைய இறப்பும் சிங்களப் பேரினவாத அரசின் தமிழ் படுகொலை என்று பிரச்சாரப் படுத்தி தேர்தலில் களம்மிறங்க அமிர்தலிங்கத்துக்கும் அவர் சார்ந்த கூட்டணியினருக்கும் நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தது.

கிழக்கு மாகாணத்தில் இருந்து இந்த தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்காக தமிழர்விடுதலைக் கூட்டணியின் ஏற்பாட்டின் பேரில் நடத்தப்பட்ட வாகன சேவையினூடு யாழ்ப்பாணம் சென்ற கட்சி அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள், யாருமே இந்த படுகொலையின் பின்னணியில் இருந்த சூட்சுமங்களை அறிந்திருக்க வாய்ப்பில்லை. அமிர்தலிங்கத்துக்கும் அல்பிரட் துரையப்பாவுக்கும் இடையே இருந்த அதிகாரப் போட்டி சண்டைகள் குறித்து அவர்கள் ஏதும் அறிந்திருக்கவில்லை. இந்த சூழ்நிலையிலையே தம் கண்முன்னே நடைபெற்றிருந்த கொலைகளை திட்டமிட்ட சிங்களப் பொலிசாரின் படுகொலையே என நம்பினர். வெடிச்சத்தங்களும் மகாநாட்டில் ஏற்பட்ட குழப்பமும் கொலை செய்யப்பட்ட 9 உடல்கள் அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றி இறக்கப்பட்டமையும் தம் கண்ணெதிரே நடந்தேறியமையால் இப்படுகொலையானது சிங்கள அரசின் திட்டமிட்ட படுகொலையென்றே அவர்களை நம்பவைத்தது. தப்பிப் பிழைத்து கிழக்கு மாகாணத்துக்கு வந்த சேர்ந்த அவர்கள் தாம் கொண்டுவந்த செய்திகளை அங்கே பரப்பினர். கண்ணால் கண்டதும் பொய் என்பதை அவ்வேளை கிழக்கிலங்கை மக்களிடத்தில் காலம் ஒருதரம் நிரூபணமாக்கிச் சென்றது.

இந்த தமிழாராய்ச்சி மாநாட்டு அனர்த்தங்களுக்கு பின்பு நடந்த முக்கியமாதொரு சம்பவம் வடக்கு கிழக்கு இளைஞர்களுக்கு வன்முறை மீதான விருப்பத்தை மென்மேலும் அதிகரிக்க ஏதுவாக்கிற்று பொன் சிவகுமாரன் யாழ்ப்பாணத்தில் நடந்த இருவேறு குண்டுத்தாக்குதல் கொலை முயற்சிகளுக்காக ஏற்கனவே தேடப்பட்டு வந்தவர் என்பதை மேலே கண்டோம். 1974 ஆம் ஆண்டு ஆனி மாதம் 5 ஆம் திகதி கோப்பாய் வங்கியொன்றில் பொதுமக்களின் நகைகளை கொள்ளையிட முயற்சிக்கையில் வங்கி ஊழியர்களாலும் பொதுமக்களின் ஒத்துழைப்பாலும் பொலிசாரால் வளைத்துப் பிடிக்கப்பட்டார். அக்கைதின் போது சயனைட் எனும் விசமருந்தி தற்கொலை செய்துகொண்டார்.


இந்த தற்கொலை தமிழர்விடுதலைக் கூட்டணியினரால் பரபரப்பாக்கப்பட்டு வீரச்சாவாக வர்ணிக்கப்பட்டது. அதனூடாக ஒருவித கீரோயிச மனப்பாங்கின் மீதான பற்றுதலை இளைஞர்களுக்கு ஊட்டிவிடுவதில் கூட்டணிப் பேச்சாளர்கள் வெற்றியடைந்தனர். அஞ்சலிக் கூட்டங்களின் போது பொதுமக்களையும் மாணவர்களையும் அணிதிரட்டிய த.வி.கூட்டணியினரும் அவர்களது கிளையினரான தமிழ் இளைஞர் பேரவையினரும் இப்படி ஆயிரம் ஆயிரம் சிவகுமாரன்கள் உருவாக வேண்டும் என்று பகிரங்கமாக பேசி வன்முறைக்கு வித்திட்டனர். மறுபுறம் இதுபோன்ற பல நிகழ்வுகளில் முக்கிய பேச்சாளராகிய அமிர்தலிங்கம் தன்னைத்தானே தமிழீழத்தின் தளபதியாக வரித்துக்கொண்டதன் ஊடாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பொறுப்பை தனக்கானதாக மென்மேலும் உறுதிசெய்து கொண்டார்.

**அல்பிரட் துரையப்பாவின் படுகொலையும் வட்டுக்கோட்டைத் தீர்மானமும்.**

தமக்கான கொள்கைகளோ மக்களுக்கான சேவைகளோ முக்கியமின்றி வீரவசனங்கள் மூலம் மட்டுமே தலைவராக வரமுயன்றவர் அமிர்தலிங்கம். இவர் போன்றோருக்கு அல்பிரட் துரையப்பாவின் அரசியல் இருப்பு சந்தோசம் தராததொன்றாகும் என்பதை முன்னர் கண்டோம்.

1975 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆம் திகதி பொன்னாலை என்னும் ஊரின் வரதராஜப் பெருமாள் கோயில் வாசலின் முன்னால் வைத்து துரையப்பா மீதான படுகொலை நிகழ்த்தப்பட்டது. அமிர்தலிங்கத்தின் மகன் காண்டீபன் தயாரித்துக் கொடுத்த திட்டமொன்றின் படியே பிரபாகரன் இப்படுகொலையை நிறைவேற்றியிருந்தார். பொலிசாரின் கெடுபிடிகளில் இருந்து தப்ப கொலையாளி பிரபாகரனுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் (அமிர்தலிங்கம், தர்மலிங்கம்) மனைவிமார் நகைகளைக் கழட்டிக்கொடுத்து உதவிசெய்தும் இருந்தனர். (ஈழப்போராட்டத்தின் எனது சாட்சியம்□ பக்:160)

இந்த நிகழ்வுகள்தான் தமிழ் அரசியலில் துரோகிகள் என்று யாரையும் சுட்டுக்கொல்லலாம் என்னும் வரலாற்றை தொடங்கி வைத்தது. இந்த சித்தாந்தம் எந்த மூளையில் இருந்து பிறந்ததோ அந்த மூளைக்குரிய மனிதன் அதே சிந்தாந்தத்துக்கு பின்னாளில் பலியாகிப் போனதையும் தவிர்க்க முடியவில்லை. இவற்றையெல்லாம் முன்னுணர முடியாமல் அமிர்தலிங்கம் போன்றவர்கள் தமது தலைமைப் போட்டிகளுக்காக கண்மூடித்தனமாக இளைஞர்களை வெறியூட்டி வளர்த்தார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்த அரசியலுக்கு வெளியே எந்தவிதமான கட்சிகளினதும் செயற்பாடுகள் இருக்கக்கூடாது எனும் நோக்கில் அவையனைத்தையுமே துரோகம் எனும் சமூகரீதியான ஒரு உளவியல் மனப்பாங்கை உருவாக்கும் பணியில் கூட்டணியின் பேச்சாளர்கள் முக்கிய பங்காற்றினர். த.வி.கூட்டணி தவிர்ந்த வேறுகட்சிகளின் சார்பில் போட்டியிடுவதோ, அவற்றோடு இணைந்து செயற்படுவதோ, அவற்றுக்கு ஆதரவளிப்பதோ கூட மரண தண்டனைக்குரிய குற்றமாகும் என்கின்ற எச்சரிக்கையுடனான செய்தியையே துரையாப்பாவின் கொலை எங்கும் பரப்பியது. ஆகவே வடக்கு கிழக்கு மக்கள் விரும்பியோ விரும்பாமலோ புரிந்தோ புரியாமலோ இந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் அலைக்குள் அமிழ்த்தப்பட்டார்கள். 1977 ஆம் ஆண்டு தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த நேரம் தமிழர்விடுதலைக் கூட்டணி யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் தனது முதலாவது மாநாட்டைக் கூட்டியது. அந்த மாநாட்டில் இலங்கைத் தமிழர்களுக்கான அரசியல் விருப்பம் என்பது சுதந்திர தமிழீழத்தை அடைவதே என்ற பிரகடனத்தை நிறைவேற்றினர். 14~05~1976 இல் நிறைவேற்றப்பட்ட இந்த பிரகடனமே இன்றுவரை வரலாற்று புகழ்மிக்க வட்டுக்கோட்டைத் தீர்மானம் என புகழப்படுகிறது. இதன் படி தமிழீழம் பெறுவதே ஒரே வழி என்கின்ற கொள்கையை தமிழ் மக்கள் அனைவரினதும் ஏக கொள்கையாக தமிழர்விடுதலைக் கூட்டணியினர் பிரச்சாரம் செய்தனர். இந்த நேரத்தில் கூட்டணியினரால் தூண்டி விடப்பட்ட இளைஞர் குழாத்தினர் கொலை, கொள்ளை, குண்டுவைப்பு என்று வன்முறையின் உச்சிக்கே போய் கொண்டிருந்தனர். தீவிரவாத நடவடிக்கைகள் மூலம் மக்களின் கவனத்தை இந்த இளைஞர் குழுக்கள் அதிகமாக ஈர்த்தன. இதன் காரணமாக மிதவாதிகளாக இருந்த கூட்டணியினரின் மீதான அபிமானம்



திசைதிரும்பத் தொடங்கியது. இன்னிலைமையை சமாளிக்கும் முகமாகவே வட்டுக்கோட்டைத் தீாமானத்தினை நிறைவேற்றி கூட்டணியினர் ஹீரோக்களாயினர். ஆனால் தமிழீழம் தமிழீழம் எனச் சொல்லிக்கொண்டு அடுத்துவரவிருந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதையே நோக்காகக் கொண்டு செயற்பட்டனர். தாம் தேர்தலில் போட்டியிடுவது பாராளுமன்றக் கதிரைகளைக் கைப்பற்றிக்கொள்வதற்கே என்ற பகிரங்கமான அசிங்கத்தை மூடி மறைத்துக் கொண்டு தமிழீழத்துக்கான ஆணை கோரியே தேர்தலில் போட்டியிடுவதாக மக்களிடம் கூட்டணியினர் பிரச்சாரம் செய்தனர். பாராளுமன்றக் கதிரைகளை கைப்பற்றுவதற்காக போட்டியிடுகின்ற இவர்கள் தமிழீழத்துக்கான ஆணையை மக்களிடம் எதிர்பார்ப்பதாக சொல்லிக்கொண்டு கொழும்பில்போய் எப்படி தமிழீழத்தைப் பெறப்போ கிறார்கள் என்கின்ற கேள்விகள் கிழக்கு மாகாணத்தில் இருந்து அப்போது எழும்பவில்லை. இந்தத் தேர்தல் நடைபெறுவதற்கு சிலமாத இடைவெளிகளுக்கு முன்புதான் மு.திருச்செல்வம் (1976~நவம்பர்), ஜீ.ஜீ.பொன்னம்பலம் (1977~ பெப்ரவரி), செல்வநாயகம் (1977~ ஏப்ரல்) போன்ற பெருந்தலைவர் களினுடைய இயற்கை மரணங்கள் சம்பவித்தன. இச்சோக நிகழ்வுகள் வடகிழக்கு மக்கள் எல்லோரையும் ஒருவித அனுதாப அலையினூடாக ஒன்று சேர்த்தது. இந்த ஒவ்வொரு மரணங்களின் போதும் தன்னையே அடுத்த தலைமையாக திட்டமிட்டு முன்னிறுத்தி வருவதில் அமிர்தலிங்கம் மிகக் கவனமாகவும், வெற்றிகரமாகவும் காய்களை நகர்த்திக்கொண்டே வந்திருந்திருந்தார்.

தொடரும்......

## கண்காணிப்புக் குழு, மோதல்கள் காரணமாக தங்களுக்கு அப்பகுதிகளில் கடமையாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகச் சாட்டுப் போக்குச் செல்கின்றது




யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரபா குழுவினருக்கு சார்பாகச் செயற்படுகிறது என அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. பிரபா குழுவினர் சிறுவர் படையணியைப் பலப்படுத்திக் கொள்ளச் சந்தர்ப்பம் அமைத்துக் கொடுக்கும் விதத்தில் வட கிழக்கிலிருந்து வெளியேறியுள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மோதல்கள் அதிகரித்துச் செல்வதின் காரணமாகத் தங்களுக்கு அப்பகுதிகளில் கடமையாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகச் சாட்டுப் போக்குச் செல்கின்றது என பாதுகாப்புப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு வடக்குக் கிழக்கில் இடம்பெறும் கிராம மட்டத்திலான மட்டுக்குள் சர்ச்சையைத் தீர்த்து வைக்கவே இங்கு வந்தது போலவும், தற்சமயம், அங்கு மோதல்கள் அதிகரித்துள்ளதால் கடமையிலிருந்து விலக வேண்டியிருக்கதாகவும் தெரிவித்துள்ளனர். இக்கூற்றானது அவர்களே அவர்களைக் கேலிக் கூத்திற்குள்ளாக்கிக் கொள்வது போல அமைந்துள்ளது.

செஞ்சோலை விடயத்தில் அரசிற்கு எதிராகக் குறுக்கிட்ட கண்காணிப்புக் குழு, சேருநுவர சோமாவதி வித்தியாலயத்தின் மீது பிரபா குழுவினர் ஆட்லெறித் தாக்குதல் நடாத்திய போது ஏன் மௌனித்திருந்தனர்? பிரபா குழுவினருக்குச் சாதகமாகவே குரல் கொடுத்தார்கள். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஐரோப்பிய ஒன்றிய நாட்டுப் பிரதிநிதிகளை வெளியேற்றிய பிரபா குழுவினருடன் உறவும், இன்று வரை இவர்களுக்கு அச்சுறுத்தல் இல்லாத அரசாங்கத்திடம் பகையுமாகத் தான் இருக்கின்றனர்.

இந்நிலையில் கொழும்பிலிருந்து கொண்டு நேர்மையாக நடப்பார்கள் என எவ்வாறு எதிர்பார்க்கலாம் எனக் கேள்வியெழுப்பியுள்ளார். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வடக்குக் கிழக்கிலிருந்து வெளியேறியிருப்பது பிரபா குழுவினருக்குப் படை ஆளணியைக் கட்டியெழுப்பிக் கொடுக்க உத்தரவாதம் அளிக்கும் விதமாகவே இருக்கின்றது எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெளிவிவகார அமைச்சின் செயலராக சமாதான செயலகப் பணிப்பாளர் நியமிக்கப்படலாம்



வெளிவிவகார அமைச்சின் செயலராக அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோகன்னவை நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகவும், எனினும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இந்தகைய நியமனத்தை விரும்பவில்லையென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. வெளிவிவகார அமைச்சின் செயலராக கடமையாற்றிய பலியக்காரவின் விலகலையடுத்து புதிய செயலராக பாலித கோகன்னவை நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளபோதும் தற்போது புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவராக கடமையாற்றும் ரொமேஷ் ஜெயசிங்கவையே தனது அமைச்சின் செயலராக நியமிக்குமாறு அமைச்சர் மங்கள சமரவீர ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார். ஆயினும் பாலித கோகன்னவே புதிய செயலராக நியமிக்கப்படலாமென நம்பத்தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன.


# பங்கர் தலைவரின் கடைசிக் கண்டு பிடிப்பு தமிழீழ தேசிய அடையாள அட்டை.




வன்னியில் மறைந்து வாழும் பங்கர் தலைவரின் புதிய கண்டுபிடிப்பொன்றை வன்னி மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளார். புதிய கண்டுபிடிப்பென்றவுடன் வன்னியிலும், வாகரையிலும் பசியினால் மக்களுக்கான உணவா இல்லை. தாக்குதல்களினால் பலியாகும் அப்பாவிப் பொதமக்களை பாதுகாப்பதற்கான புது யுத்திகளா இல்லை, மட்டக்களப்பில் வாகரை தொடக்கம் தொப்பிக்கல் வரை தோல்விகண்டு ஓடிவரும் பிரபா குழுவினரை உற்சாகமூட்டும் புது ஆயுதமா இல்லை, புது தந்திரோபாயமா என எல்லோரும் குழம்ப தலைவரோ சிரித்துக் கொண்டு அடையாள அட்டையை அறிமுகம் செய்து வைக்கின்றார்.

பங்கர் தலைவர் ஏதோ உலக வரலாற்றிலேயே யாரும் கண்டு பிடிக்க முடியாத ஒன்றைக் கண்டு பிடித்து விட்டதாக அவரின் பினாமி ஊடகங்கள் புகழ் பாடி புகைப்படம் வெளியிட்டுக் கொண்டிருக்கும் போது வாகரையிலும் வன்னியிலும் பல்லாயிரம் தமிழ் மக்கள் உண்ண உணவின்றி பாதுகாப்பான இடமின்றி அல்லல் படுகின்றனர். புதுவருடத்தினத்தில் புது அடையாள அட்டையை பங்கர் தலைவர் ஏன் அறிமுகம் செய்ய வேண்டும். பங்கர் தலைவரின் மாவீரர் தின கூக்குரலின் பின் அவரைப்பற்றியும், அவரின் நிருவாகம் பற்றியும் செய்தி எதுவும் வராததினால் எங்கே தான் மண்டையைப் போட்டுவிட்டேன் என மக்கள் நினைத்து மகிழ்ச்சித் தாண்டவம் ஆடிவிடுவார்களோ என்ற அச்சமும் பிரபா குழு உறுப்பினர்களும் தலைவர் போய்விட்டார். என்று கூறி ஆயுதங்களை போட்டு விட்டு குடும்பத்தினருடன் இணைந்து விடுகிறார்களோ என்ற பயத்தினாலும் தான் ஏதாவது ஒன்றை செய்ய வேண்டும் என தனது உதவியாளர்களை மிரட்ட அவர்களில் யாரோ ஒருவர் கொடுத்த ஐடியாதான் இவ்வடையாள அட்டை.

அவ்வடையாள அட்டையில் இன்னொரு சூட்சுமமும் உள்ளது. அதாவது அவ்வட்டை வைத்திருப்பவர்கள் மாத்திரம் தான் வன்னியில் நடமாட முடியும் எனவும் கண்டிப்பான உத்தரவு போடப்பட்டுள்ளதாம். ஏனென்றால் பொட்டனின் உளவாளிகள் சொன்ன தகவலொன்று பங்கர் தலைவரின் வயிற்றில் புளியைக் கரைத்து சுத்தத்தையும் கொடுத்து விட்டதாம். தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் ஆழஊடுருவித்தாக்கும் படையணியின் அதிக உறுப்பினர்கள் வன்னிக்குள் ஊடுருவியிருப்பதாகவும் அவர்களினால் எந்நேரமும் தலைவருக்கோ, பொட்டனுக்கோ ஆபத்து வரலாம் என எச்சரிக்க அவர்களைக் கண்டுபிடிக்கவும் தான் இந்த அடையாள அட்டை ஐடியாவாம்.



# தமிழலை வாசகர்களாகிய உங்களின் கேள்விகளுக்கு முசுப்பாத்தி மாஸ்டர் முத்தான பதில்கள் அளிக்கின்றார்.



எஸ்.கணேசமூர்த்தி
சூரிச்
சுவிட்சலாந்து

**கேள்வி:** உங்கள் கோபதாபங்களை ஓரங்கட்டி வைத்துவிட்டு தயவு செய்து இந்தக் கேள்விக்கு ஒரு தமிழன் என்னும் வகையில் பதில் சொல்லுங்கள்.
அண்மையில் ஏற்பட்ட திரு.பாலசிங்கம் அவர்களினுடைய மறைவு புலிகளுக்கு மட்டும் அல்ல தமிழ் மக்களுக்கும் ஒரு இழப்புத்தானே?




**பதில்:**
இழப்பல்ல தம்பி கணேசலிங்கம். பாலசிங்கத்தின் இழப்பு தமிழ் மக்களுக்கு பேரிழப்பு எண்டு சொல்லணும். இவன் பொட்டன் இந்தியப் பிரதமர் ராஜிவ்காந்தியை போட்டவுடனே இந்தியா கொண்டுவந்த புலிகள் மீதான தடையை எடுக்க உடாம அப்பப்ப அத துன்பியல் இன்பியல் எண்டு சேக்ஸ்பியர் லெவலில விளப்பம் சொல்லி இந்திய அரசாங்கத்துக்கு ஞாபகப்படுத்திக்கொண்டிருந்தவர் நம்மட பாலசிங்கம்தானே.
லண்டன் அமெரிக்கா எண்டு தொடங்கி அவுஸ்ரேலியாவில போய்நிண்ட புலிகள் தடையை கதிர்காமரைப் போடச்சொல்லி ஐடியாகொடுத்து முழு ஐரோப்பா லெவலிலயும் புலிகள தடைசெய்ய வச்சது நம்மட பாலசிங்கம்தானே.
சமாதானம் வந்த ஒடனே சர்வதேச பத்திரிகையாளர் மாநாட்டை கூட்டிப்போட்டு இவன் வேலிர மகன கொண்டுவந்து நடுவில நிப்பாட்டி முழியோ முழியெண்டு முழிக்க வச்சதன் மூலம் பிரபாகரன் ஒரு முழு முட்டாள் என்று உலகத்துக்கு காட்டிக்கொடுத்தது நம்மட பாலசிங்கத்தானே.
அதுமட்டுமோ தம்பி தாய்லாந்துக்கு போன தமிழ்செல்வன் பாவம் அங்கால சிலுசிலுப்புச் சிங்காரிகள பாக்கப்போன கதைய போன வருசத்து மாவீரர் உரைக்கு பொழிப்பு சொன்னபோது அவுட்டுட்டு தமிழ்செல்வன்ட மானத்த கப்பல்ல ஏத்தினது நம்மட இந்த பாலசிங்கம்தானே.
எல்லாத்துக்கும் மேலால கருணா அம்மான் பிரிஞ்ச ஒடனே அவன் ஒரு தனி மனிசன்தானே, அடிச்சு கலச்சு விடலாமல்லே எண்டு தான் தண்ணியப் போட்டிற்று பிரபாகரனுக்கு ஊசி ஏற்றிவிட்டது இந்த பாலசிங்கம். பொறகு கிழக்கு மாகாணத்தில் இருந்து வன்னிப்புலிகள் வாங்கிக் கட்டக்குள்ள புதுனம் பார்த்துக்கொண்டு லண்டனில படுத்திருந்தது இந்த பாலசிங்கம்தானே.
இந்தப் பெரும்பணிகளையெல்லாம் செய்த பாலசிங்கத்தின் மறைவு தமிழ் மக்களுக்கு பேரிழப்புத்தானே. மனிசன் இன்னும் கொஞ்சநாள் கெடந்திரிக்கலாம். கெடந்திருந்தா இவன் வேலிர மகனுக்கும் கடைசும் மொதலுமா ஒரு வழி பண்ணிரிக்கும். என்ன செய்யிற நாம குடுத்து வெச்சது அவ்வளவுதான்.

தவராசா
வவுனியா

**கேள்வி:**
அண்மையில் வன்னியில் நடந்த பாலசிங்கம் அவர்களின் அஞ்சலி நிகழ்வின் போது பிரபாகரனுடன் அவரது துணைவியாரும் வரலாற்றில் முதற்தடவையாக வெளியே வந்து போட்டோவிற்கு போஸ் கொடுத்துள்ளாரே கவனித்தீர்களா?



**பதில்:**
நானும் உங்கள மாதிரித்தான் நாளும்பொழுதும் இதப்பத்தி தலய ஒடச்சுப்போட்டு அங்க என்ன நடக்குது எண்டு ஒரு கணக்குப் போட்டுப் பார்த்தன். வாத்தியார் இஞ்ச வயல்வட்டை எண்டு திரிஞ்சாலும் நமக்கும் பலபக்க உளவு இரிக்கித்தானே தவராசா. அவர் தொந்தியர் துணைவியாரோட வெளியே போஸ் குடுத்ததில் இருந்து பாலகுமாரும் தமிழ்செல்வரும் ஒரே புறுபுறு கறபுற எண்டு திரியிறாங்களாமே! அதையும் வெச்சு பாக்கக்குள்ளதான் ஓடி வெளிக்குது இறந்துபோன மதி உரைஞருக்கு பதிலா துணைவியார் மதிவதனி நாச்சியார புதிய மதியுரைஞ் ஆக்கிற பிளானாக்கூட இரிக்கலாம். நாம எதக்கண்டம்.



செல்வராணி
அக்கரைப்பற்று

**கேள்வி:**
கிழக்கு மாகாணம் எங்கும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை நேரம் பார்த்து பிரபா குழு மாணவர்களை கடத்தியது சரியான துரோகச் செயலாகும். ஆனாலும் திருக்கோயிலில 27 மாணவர்களைக் கடத்தியதில் புலிகள் சர்வதேசத்தின் முன் நல்லா அம்பலப்பட்டு விட்டார்கள். இப்படி பரீட்சைகளை திட்டமிட்டு குழப்பிக்கொண்டே இருந்தால் தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலம் என்னவாகும்?




**பதில்:**
ஏன் அப்படிக் கவலைப் படுறீங்க? அன்ரன் பாலசிங்கத்தின் நினைவுக் கூட்டங்கள் வடமாகாணத்தில்
க.பொ.த. பரீட்சையை குழப்பாத வகையில் மிகக் கவனமாக நடத்தப்பட்டது என்கின்ற செய்திகள் புலிகளின் ஊடகங்களில் பரவலாக வெளிவந்ததே.

தியாகராஜா
கொழும்பு

**கேள்வி:**
அப்படி இப்படி ஜே.வி.பி யோடு சேர்ந்து ஒருவகையா உங்கட கிழக்கு மாகாணத்த தனியாப் பிரிச்சுப் போட்டீங்கள். நாளைக்கு உவங்கள் முஸ்லிம்களும் சிங்களவர்களும் சேர்ந்துகொண்டால் நீங்க என்ன செய்வீர்கள்?

**பதில்:**
நாங்களும் அவர்களுடன் சேருவோம். பிரச்சனை முடிஞ்சிது. ஹீ... ஹீ...ஹீ...
தம்பி தியாகராசா உம்மட எழுத்தில நீர் யாரெண்டு தெரியுதண. மார்ச் மாதம் 4 ஆம் திகதி 2004 ஆண்டு ஞாபகம் இருக்குமெல்லே உமக்கு. எல்லாப் பேப்பர்காரரும் என்ன எழுதினவ உள்வீட்டுப் பிரச்சனை அதுதானுங்கோ உதுவும். உது எங்களின்ட உள்வீட்டுப் பிரச்சனை. நீர் உம்மட சோலியப் பாருமன்.

## முசுப்பாத்தி மாஸ்டர்



**முசுப்பாத்தி மாஸ்டரின் பதிலுக்காக உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**
**மீனகம்**
**தமிழ் அலை கேள்வி பதில்**
**இல,39 கோவிந்தன் வீதி**
**மட்டக்களப்பு**
**மின்னஞ்சல் முகவரி**
tamilalainews@yahoo.com
tmvp.news@gmail.com

# சதாம் ஹுசைன்

**எழுதுவது உத்தமன்**





அமெரிக்காவினால் பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் ஈராக் அதிபரும் அந்நாட்டை 24 ஆண்டுகளாக இரும்புக்கரம் கொண்டு ஆட்சிநடாத்தியவரான சதாம் ஹுசைன் 30.12.2006 அன்று ஈராக் நாட்டு நேரப்படி காலை 5.50 மணியளவில் தூக்கிலிடப் பட்டார். ஈராக்கின் தலைநகர் பக்தாத்திலுள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குச் சொந்தமான அறிவிக்கப்படாத கட்டட மொன்றில் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் இத்தண்டனை நிறைவேற்றப்பட்டது. தண்டனை கிடைக்கப்பெற்ற சில மணிநேரத்தில் ஈராக்கிய தொலைக்காட்சியில் சதாமிற்கான தண்டனை நிறைவேற்றப்பட்ட காட்சிகள் ஒளிபரப்பப்பட்டன. முகமூடி அணிந்த காவலர்களால் சதாம் தூக்கு மேடைக்கு அழைத்து வரப்படுவதையும், அவரின் கழுத்தில் துணி கட்டப்பட்டு தூக்குக் கயிறு கழுத்தில் மாட்டப்படுவதும் காண்பிக்கப்பட்டது. தனது முகத்தை கறுப்புத் துணியால் மூட அவர் அனுமதிக்கவில்லை..

சதாம் ஹுசைனின் சடலம் யெமனில் தான் அடக்கப்பட வேண்டும் என அவரின் புதல்வி கூறிய போதும் மிக ரகசியமான முறையில் சதாமின் உடல் அவரின் சொந்த ஊரான டிக்கிறிட்டிற்கு கொண்டு செல்லப்பட்டு குறைந்தளவான உறவினர்கள் முன்னிலையில் அவரின் உடல் அவரின் புதல்வர்களின் சடலங்களுக்கருகில் நல்லடக்கம் செய்யப் பட்டது. சதாம் மீதான மரணதண்டனை நிறைவேற்றத்தை பல நாடுகள் வன்மையாக கண்டித்துள்ளன. வத்திக்கான், இந்தியா, பிரான்ஸ், ரஷ்யா, சீனா உட்பட பல நாடுகள் கண்டித்துள்ளதுடன் முழு முஸ்லிம் நாடும் இத்தண்டனை நிறைவேற்றத்திற்கு எதிரான தமது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது. முஸ்லிம்களின் புனித நாட்களில் ஒன்றான ஈதுல் அல்ஹா பண்டிகை தினத்தில் இத்தண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பது முஸ்லிம்களின் ஆத்திரத்தை இன்னும் அதிகப்படுத்தியுள்ளது. இதே வேளை ஈராக் பிரதமர் மலிக் அல் சாரியும், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ். டபள்யு. புஷ்ஷும் இத்தண்டனை நிறைவேற்றத்தை வரவேற்றுள்ளனர்.

சதாம் தூக்கிலிடப்படுவதற்கு முன் மிக அமைதியாகவே இருந்தார். தூக்கிலிடு வதற்கான முயற்சிகள் நடந்த போது அவர் எவ்வித எதிர்ப்பையும் காட்டவில்லை. அனைத்தையுமே அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார். என்கிறார் இச்சம்பவத்தின் போது ஈராக் அரசாங்கத்தின் சார்பாக கலந்து கொண்ட தேசிய பாதுகாப்பு ஆலோசகரான அல் சபாய். இச்சம்பவத்தின் போது நேரில் பிரசன்னமாயிருந்த மனித குலத்திற்கெதிரான நீதிபதி முனீர் ஹமாட் கூறுகையில் நீங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஈரானியர்களை நம்ப வேண்டாம் அவர்கள் அபாயமானவர்கள். நான் எவருக்கும் அஞ்சியவனல்ல இவைகள் தான் சதாம் கடைசியாக உதிர்த்த வார்த்தைகள் என்றார்.

சதாம் ஆட்சிப் பொறுப்பேற்ற சிறிது காலங்களிலேயே ஈரானுடனான 8 ஆண்டு யுத்தத்தை ஆரம்பித்தார் என்பதும், ஈரானுடனான உறவை அவர் என்றுமே விரும்பவில்லை என்பதும் அனைவருக்கும் தெரிந்த விடயம்தான். இப்போது ஈராக்கில் ஆட்சி நடாத்தும் ஷியா அரசாங்கமும், 1982ஆம் ஆண்டு பக்தாதிற்கு வடபுறமாக அமைந்திருக்கும் துகாயில் என்ற கிராமத்தினூடாக சதாம் ஹுசைனின் வாகனத் தொடரணி பயணம் செய்த போது சதாம் ஹுசைனின் மீது கொலை முயற்சிகள் நடைபெற்றது. இதன் பின்னர் சதாம் ஹுசைனின் காவலாளிகள் நடாத்திய பதில் தாக்குதலில் 141 ஷியா முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இது தொடர்பான விசாரணை முடிவின் போதே மனித குலத்திற்கெதிராக குற்றமிழைத்தவர் என்ற குற்றச் சாட்டில் அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. இதன் வெளிப்பாடாகவே சதாம் தமது இறுதிக் காலத்தில் ஷியாக்கள் மீது தனது வெறுப்பைக் வெளிப்படுத்தினார்.

சதாம் ஹுசைன் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு சில நாளிகை முன்பு வரை அமெரிக்க இராணுவத்தின் பாதுகாப்பிலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடம் மிகப் பாதுகாப்பாக, ரகசியமாகவே வைக்கப்பட்டது. தண்டனை நிறைவேற்றப்பட சில மணி நேரத்திற்கு முன்பாகத்தான் அமெரிக்கப்படையினரால் ஈராக்கிய அதிகாரிகளிடம் அவர் கையளிக்கப்பட்டார். சதாம் ஹுசைன் மீதான விசாரணைகளுக்கும், தண்டனைக்கும் அமெரிக்க அரசாங்கத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லையென சகலரையும், ஈராக் மக்களையும் நம்பவைக்க ஈராக் அரசாங்கம் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டு வருகின்றது. ஆனால் இதுவரை யாரும் இதனை நம்பவில்லை. பாதுகாப்புக் காரணங்களுக்கு மட்டும்தான் சதாம் அமெரிக்காவின் பாதுகாப்பில் வைக்கப் பட்டார். என்று கூறும் ஈராக் அரசாங்கம் சதாம் எங்கு தடுத்துவைக்கப்பட்டார், எங்கு தூக்கிலிடப்பட்டார் என்பதை கூற மறுத்துவிட்டது. இனியும் கூறப்போவதில்லை என்றே தோன்றுகின்றது. ஏனெனில் அவ்விடம் நாளை ஈராக்கிலுள்ள சதாமின் ஆதரவாளர்களால் புனித இடமாகக் கொள்ளப்படலாம் என்ற அச்ச உணர்வே இதற்குக் காரணமாகும்.



சதாம் ஹுசைன் நல்லவரா? கெட்டவரா? இல்லை தூக்குத்தண்டனைக்குத் தகுதியானவர்தானா? இல்லை பொதுமன்னிப்பு வழங்கப்பட்டிருக்கலாம் போன்ற கேள்விக்கு அப்பால் அவர் மீதான குற்றச் சாட்டு, விசாரணைகள், விசாரணை நடாத்தப்பட்ட விதம், ஈராக் மீதான ஆக்கிரமிப்பு போன்றவற்றில் காட்டப்பட்ட அவசரம் தான் பலத்த சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

சதாம் தனது ஆட்சிக் காலத்தில் நல்லவராக, கௌரவமான தலைவராக இருக்கவில்லை என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதுதான். புரட்சிகர பாத் கட்சியின் தளபதிப் பொறுப்பை ஏற்க அவர் கடும் சவால்களையும், பல சிறைகளையும் சந்திக்க வேண்டியிருந்தது. ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றவுடன் ஈரான் மீது கடும் தாக்குதலொன்றைத் தொடுத்தார். 8 ஆண்டுகள் நீடித்த இப்போரில் பெரும் இழப்புக்களுடனும், அழிவுகளுடனும் முடிவுபெற்றன. சுன்னி முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த சதாம் ஹுசைன் தனது ஆட்சிக் காலத்தில் ஷியா முஸ்லிம்கள் மீதும் குர்திஷ் இன மக்கள் மீதும் கடுமையாக நடந்து கொண்டார் என்றும் கூறப்படுகின்றது. சதாமின் ஆட்சிக்காலத்தில் கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்பன மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருந்தன. தென் ஈராக்கில் குர்திஷ்இன மக்கள் மேற்கொண்ட புரட்சியை சதாமின் இராணுவம் இரசாயன ஆயுதங்கள் மூலம் பல நூற்றுக் கணக்கானவர்களைக் கொன்றதாயும் குற்றம் சாட்டப்பட்டது. இவை மட்டுமன்றி மத்திய கிழக்கு அரபுகளின் கதாநாயகநாக மிளிர வேண்டும் என்பதற்காக தனது இராணுவ பலத்தை பன்மடங்கு அதிகரித்த சதாம் அழிவு தரும் ஆயுதங்களிலும் அதிக நாட்டம் காட்டினார் என்றும் கூறப்பட்டது.

மத்திய கிழக்கில் விளையும் எண்ணெய் வளத்தை தன் பக்கம் வைத்திருக்க முனைந்த அமெரிக்காவிற்கு, மத்திய கிழக்கின் சிங்கமாக மாற கங்கணம் கட்டிக் கொண்டிருந்த சதாம் எதிரியாக மாறியமை வியப்பல்ல. எண்ணெய் வளம் மிகுந்த சவூதி அரேபியா, குவைட் போன்ற நாடுகள் அமெரிக்காவுடன் நட்புறவாக சதாம் ஆத்திரமடைந்தார். எண்ணெய் விலையை தானே நிர்ணயிக்க வேண்டும் என்பதற்காக 1988 ஆம் ஆண்டு ஒபெக் மாநாடு நடைபெற்ற சமயம் கார்லோஸ் என்ற சர்வதேச புரட்சியாளனுடன் இணைந்து ஒபெக் எண்ணெய் வள அமைச்சர்களையே கடத்தியது சதாமின் புலனாய்வுப்படை. இவ்வாறாக மத்திய கிழக்கு நாடுகளையே கட்டுப்பாட்டில் வைக்க இடையிடையே மிரட்டல் விளையாட்டுக்களிலும் ஈடுபட்டார் சதாம். இதன் உச்சக் கட்டமாக குவைட்டை 1990 ஆம் ஆண்டு ஈராக் ஆக்கிரமிக்க சீனியர் புஷ் இதுதான் தருணம் என்று ஈராக்கின் மீது நேட்டோ நாடுகளின் உதவியுடன் தாக்குதல் மேற்கொண்டு ஈராக்கையே சின்னாபின்னமாக்கினார். சீனியர் புஷ்ஷினால் ஈராக்கை நாசப்படுத்த முடிந்ததே தவிர சதாமை அழிக்க முடியவில்லை. அவருக்கு அடுத்து ஆட்சிக்கு வந்த பில் கிளின்டனும் ஈராக் மீது கடுமையான வான் தாக்குதல்களை மேற்கொண்டார். அவராலும் சதாமை அழிக்க முடியவில்லை. அவர்களிருவரும் செய்யாததை ஜூனியர் புஷ் இப்போது செய்து காட்டியுள்ளார். 1982 ஆம் ஆண்டு ஷியா முஸ்லிம்களினால் சதாம் ஹுசைனைக் கொல்ல சதி முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டது. இது தொடர்பாக அதேயாண்டு நடைபெற்ற விசாரணையின் போது 148 ஷியா முஸ்லிம்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அவர்களில் 35 பேர் 18 வயதுக்கும் குறைவானவர்கள் என்றும் குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால் இக்குற்றச் சாட்டை நீதி விசாரணையின் போது மறுத்தார் அல்-பண்டார். நான் என் கடமையை மட்டும் தான் செய்தேன் 18 வயதுக்கு குறைவானவர்களுக்கு மரண தண்டனை விதிக்க என் மனச்சாட்சி இடம் தரவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர்களின் சார்பில் வாதாட வக்கீல்களுக்கும் சந்தர்ப்பம் தரப்பட்டது என்றார் பண்டாம். ஆனால் சதாமின் உத்தரவின் பேரில் நீதியாக விசாரணை மேற்கொள்ளாமல் அனைவருக்கும் மரண தண்டனை விதித்தார் என்பது இவர் மீதான குற்றச் சாட்டு. சதாமிற்கு எதிரான நீதிவிசாரணைகள் இடம் பெற்ற போது அதன் விதி வெவ்வேறாக அமையும் என்பது தெரிந்த ரகசியமானது. ஆரம்பத்தில் சதாமிற்கும், அவரது சகாக்களிற்கும் எதிராக மரணதண்டனை தண்டனை விதிக்கப்பட அவர்கள் அதற்கெதிராக மேன்முறையீடு செய்ய மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டதோடு 30 நாட்களுக்குள் மரண தண்டனையை நிறைவேற்றுமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. என்று சதாம் கைது செய்யப்பட்டாரோ அன்றே அவரின் தலைவிதி நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. துகாவில் 1982 ஆம் ஆண்டு 148 ஷியாக்கள் கொல்லப்பட்டமைக்கு சதாமுக்கும் அத்தீர்ப்பை வழங்கிய நீதிபதி பண்டாருக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டது. இதில் நீதிபதி பண்டார் மீதான குற்றச் சாட்டு மேலிட உத்தரவுக்கமைய செயற்பட்டார் என்பதுதான். சதாம் மீதான விசாரணையின் போது எம்மேலிட அழுத்தங்களும் இல்லாமல் ஈராக்கிய நீதித்துறை சுதந்திரமாகச் செயற்பட்டது என உறுதியாக கூறமுடியுமா? என்று கேட்டுள்ளார் எகிப்து பல்கலைக்கழக விரிவுரையாளரான சதில். பெரும்பாலான மத்திய கிழக்கு வாசிகளின் எண்ணப்பாட்டையே பிரதபலிக்கிறார் சதில். தியாகத் திருநாளான ஹஜ் பெருநாளன்று சதாமின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமை . முஸ்லிம்களின் அதிருப்தியையும் மேலும் அதிகரித்துள்ளது. அவசரமாகவும், கடுமையாகவும் சதாம் மீதான மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமை உண்மையிலேயே அவர் இழைத்த குற்றங்களை மறக்கச் செய்வதுடன் முஸ்லிம் மக்கள் மத்தியில் அவர் தொடர்ந்தும் கதாநாயகனாகவே திகழ்வார் எனவும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். இறுதியாக மொத்த அதிருப்தியும் அமெரிக்கா மீதே திரும்பும் என்ற அச்ச உணர்வையும் அவர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர். சதாம் தண்டனைக்குரியவரா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் ஈராக்கிய மக்களே. ஈராக் மக்களின் உரிமையினை தீர்மானிக்க ஜோர்ஜ் புஷ் யார்? என்பதுதான் மத்திய கிழக்கு வாசிகளின் ஆதங்கமாகும்.

ஈராக் எண்ணெய் வளமும், இயற்கை வளமும், புராதன நாகரீகமும் கொண்ட ஒரு அற்புதமான நாடு . உலக நாகரீகத்திற்கே வித்திட்ட கலாச்சார விழுமியங்களைக் கொண்ட இந்நாட்டை சதாம் கொடுங்கோல் ஆட்சி புரிந்தாலும் நாட்டை பிளவுபடாமல் கட்டுக் கோப்பாகவே வைத்திருந்தார். இந்நாட்டை இன்று அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் பிளவு படுத்தியுள்ளதுடன் ஷியா, சுன்னி, குர்திஷ் என்ற பல இனங்களையும் ஏற்படுத்தியுள்ளனர் என்பதே நடுநிலையாளர்களின் குற்றச் சாட்டாகும். சதாமின் ஆட்சியில் கட்டுக்கோப்பாக இருந்த ஈராக்கில் இன்று தினமும் கொலையும், கொள்ளையும், மலிந்து விட்டன. உலகிலே மிக வன்முறையான நாடு என்ற பெருமை மட்டுமே அமெரிக்கர்களால் ஈராக்கில் ஏற்படுத்த முடிந்துள்ளது என்கின்றார் மொஸ்கோ பல்கலைக்கழகத்தின் சர்வதேச விவகார ஆய்வாளர் பீட்டர் ஸ்ரோன்ட்.

ஹியூமன் றைட் வோச் அமைப்பின் இயக்குனர் டிக்சன் போனார்ட் ஒரு அரசாங்கம் தனது எதிரியை எவ்வாறு நடாத்துகின்றது என்பதைக் கொண்டுதான் அதன் மனித உரிமையை மதிக்கும் தன்மையை எடை போட முடியும். அவ்வகையில் பார்த்தால் சதாமின் அரசாங்கம் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டது உண்மைதான் ஆனால் இத்தண்டனை அதனை நியாயப்படுத்தாது. இதன் மூலம் சதாமிற்கும், அமெரிக்க ஆட்சியாளர்களுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை என்பதே வெளிப்படுத்தப் பட்டுள்ளதாக அவர் மேலும் கூறுகின்றார்.

பெரும்பான்மையான ஷியா முஸ்லிம்களை அடக்கி சதாம் ஆண்டார் என்றும் அவரது ஆட்சியை ஷியாமக்கள் விரும்பவில்லை என்பதும் உண்மைதான். அமெரிக்கப்படை ஆக்கிரமிப்பினால் இப்போது பெரும்பான்மையான ஷியா மக்களே ஈராக்கை ஆள்கின்றனர். ஆனால் அதற்காக அவர்கள் கொடுத்துள்ள விலை மிகப்பெரியது. தமது நாட்டையே அவர்கள் விலையாகக் கொடுத்துள்ளனர். இதனை இப்போது பெரும்பான்மையான ஷியா மக்களும் உணர்ந்து வருகின்றனர். ஷியா மக்களின் உள்நாட்டு எதிரி இப்போது தூக்கிலிடப்பட்டுள்ளதால் இனி அவர்கள் யதார்த்தத்தை உணர்ந்து அடுத்து தமது உண்மையான எதிரியை தோற்கடிப்பர் என்கின்றனர் ஆய்வாளர்கள்.





ஆழிப் பேரலையின் இரண்டாம் வருட நினைவில் உயிரிழந்த சகோதரர்களுக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மகாஜனக் கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்றில் தமது அஞ்சலியைச் செலுத்தியபோது






தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் பட்டிருப்புப் பிரதேச அரசியல் செயலகம் களுவாஞ்சிக்குடியில் திறந்துவைக்கப்பட்ட சமயம் மதப் பெரியார்களுடன் பொதுமக்களும் கலந்துகொண்டபோது





வாகரையிலிருந்து அகதிகளாக இடம்பெயர்ந்து கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் மக்களுக்கு நிவாரணப் பொட்களை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அரசியல்ப் பிரிவினர் பகிர்ந்தளித்தபோது

உண்மைகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது
உத்தியோகபூர்வ இணையத்தள முகவரி www.tamilalai.org
எமது பத்திரிகை மற்றும் இணையத்தள தொடர்புகளுக்கும்
விமர்சனங்களுக்கும் tamilalainews@yahoo.com